Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 141 குரோதி வருடம், மார்கழி மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை
(06.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 05, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

## கமெண்ட் கந்தர்...



முதலீட்டாளர்களிட்ட காசு கேட்டார்கள் என்பதுதான் குற்றமென்றால் எல்லா ஆட்சிகளிலும் இருந்த அமைச்சர்மார் ஏராளமானோரை கைது செய்யவேண்டிவரும் என்னங்கோ...

## உஷ்



கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் அவர் தனது தந்தையார் ஆனந்தசங்கரியை சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

கனடாவில் இது தேர்தல் வருடம் என்பதால் பொதுவெளியில் கருத்துகள் எதனையும் அவர் வெளியிடும் வாய்ப்பில்லை எனத் தெரிகிறது.

# மாகாண சபைத் தேர்தல் அதிகாரப் பரவலாக்கம்

## இலங்கையை வலியுறுத்தி இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாட்டில் தீர்மானம்



இலங்கையில் நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை மிக விரைவாக நடத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலப் பிரிவு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாட்டில்... » 02 பக்கம்

# கப்பம் கோரிய அமைச்சர்கள்!

## இரண்டு நாடுகளால் அரசுக்கு முறைப்பாடு

வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் கப்பம் கோரிய முன்னாள் அமைச்சர்கள் இருவர் தொடர்பில் அரச மேலிட உத்தரவின் பேரில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த ஆட்சியின்போது நாட்டுக்கு வந்த தென் கொரிய மற்றும் அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களிடம் முன்னாள் அமைச்சர்கள் கப்பம் கோரியதால் தமது முதலீடுகளைக் கைவிட்டு அந்த முதலீடுகளை இந்தியா மற்றும் வியட்நாமுக்கு கொண்டு சென்றதாக இலங்கையிலுள்ள தென்கொரிய மற்றும் அவுஸ்திரேலிய தூதுவர்கள் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாக முறையிட்டுள்ளனர்.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்த தென்கொரிய தூதுவர் மியோன் லீ மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன் ஆகியோர் இந்த முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

முத்துராஜவெலயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு குழாய் மூலம் எரிபொருளைக் கொண்டு செல்வதற்காக கோரப்பட்ட பகிரங்க திறந்த டெண்டரை தனது நாட்டைச் சேர்ந்த முதலீட்டாளர் வென்றதாகவும், ஆனால், ஏதோ ஒரு காரணத்தால் திட்டத்தை செயற்படுத்த... » 02 பக்கம்

## ஜனாதிபதி வேட்பாளர்கள் ஐவருக்கெதிராக வழக்கு

» 02பக்கம்

## எண்ணெய் இறக்குமதி; 5000 கோடி வரி ஏய்ப்பு!

» 02பக்கம்

## குழந்தை பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி

நாட்டில் 11 வருடங்களின் பின்னர் குழந்தை பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டு 03 இலட்சத்து 52ஆயிரத்து 450 குழந்தைகள் பிறந்ததாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 02 இலட்சத்து 28 ஆயிரத்து 91 ஆக குறைவடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

» 02 பக்கம்

## மேன்முறையீட்டுக்கு புதிய நீதியரசர்கள்

மேல் நீதிமன்ற நீதிபதிகள் கே.எம். சரத் திசாநாயக்க மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோர் மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட அரசியல மைப்புப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இதற்கான சிபாரிசு அரசியலமைப்புப் பேரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதிகளான திசாநாயக்க மற்றும் ஹெட்டியாராச்சி ஆகியோர் இந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.



## அரிசி லொறிக்குள் பயணித்த நாய்கள்

### பலாங்கொடையில் சம்பவம்

பலாங்கொடை நகரில் உள்ள கடைகளுக்கு விநியோகம் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட அரிசி லொறியில் இரண்டு... » 02 பக்கம்




»03 பக்கம்

### - புலமைப்பரிசில் பரீட்சை -

## விடைத்தாள் திருத்தம் 08ஆம் திகதி ஆரம்பம்

சர்ச்சையை ஏற்படுத்திய 2024ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 08ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள்... » 02 பக்கம்






## நாவலப்பிட்டியில் மண்ணெண்ணெய் இல்லை



ஸ்ரீ

நாவலப்பிட்டி பிரதேச மக்களுக்கு கடந்த மூன்று மாதகாலமாக மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி நகரில் உள்ள மூன்று எரிபொருள் நிலையங்களில் ஒரு எரிபொருள் நிலையத்தில் மாத்திரமே மண்ணெண்ணெய் விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த மூன்று மாத காலமாக குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக் கப்படுவதில்லை என்று நாவலப்பிட்டி பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு ஹட்டன் நகருக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பிரதேச மண்ணெண்ணெய் பாவனையாளர்கள் கருத்துத் தெரிவிக் கின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து பொறுப்பு வாய்ந்த தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் - 883 நிகழ்வு புதன்கிழமை(08) மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியலாளர் மு.மயூரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் "கலந்து அன்பாகிக் கசிந்து உள் உருகும் களம்" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுட்கால உறுப்பினர் ஆ.சடகோபன் உரையாற்றவுள்ளார்.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்

### முன்னாள் எம்.பி. சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு







சிவகுமார் திவ்யா

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தற்போது அங்கம் வகிக்கும் 05 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடவுள்ளோம் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று (05) இடம்பெற்றது. இதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இரண்டு தடவை இணையவழி ஊடாக பேசியுள்ளோம். இன்றைய கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேசினோம். அத்துடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியை கிராம மட்டங்களில் பலப்படுத்தல் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

முக்கியமாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தற்போது அங்கம் வகிக்கும் 05 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் தேசியப் பரப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ் கட்சிகளுடன் இது தொடர்பில் பேசுவதாகவும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதலாவது வாரத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாநாட்டை வவுனியாவில் நடத்த தீர்மானித்துள்ளோம். அதற்கு முன்னதாக மாவட்ட நிறைவேற்றுக் குழுக்கள் கூடி என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் எனவும் தீர்மானிப்பார்கள். அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது சரியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் நாம் ஆணித்தரமான கருத்துகளை கொண்டிருக்கின்றோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கக்கூடிய புதிய அரசாங்கம் வந்திருக்கிறது.

புதிய அரசாங்கம் ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் மாற்றம், அரசியலில் மாற்றம், ஊழல் இல்லாத நிர்வாகத்தை ஏற்படுத்துவது எனப் பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது எம் மக்களது கருத்தாக இருக்கிறது. அந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் கூட ஒரு மாற்றம் ஏற்படும் என்பதற்காக தான் அந்த வாக்குகளும் அளிக்கப்பட்டதாக நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, தமிழ் மக்கள் மத்தியில் 75 வருடமாக தேசிய இனப்பிரச்சினை புரையோடிப்போயுள்ள பிரச்சினையாக இருக்கிறது. அது தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு புதிய அரசாங்கத்திடம் இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மிடம் இருக்கிறது. கடந்த 07 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாணசபை தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் எனக் கூறுகிறார்கள். தாமதமாக நடத்த வேண்டும் என்ற தேவை இருக்கிறதா அல்லது அதற்கு முன்பு நடத்தலாமா போன்ற கருத்துக்கள் எம் மத்தியில் பேசப்பட்டன.

உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்து ஓரிரு மாதங்களில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம். மாகாண சபைக்கு உரித்தான 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த அரசாங்கம் மிக விரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரம் தான் தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படும் எனவும் நாம் கருதுகின்றோம்.

ஆகவே, அரசாங்கம் வெறுமனே பேச்சில் மாத்திரம் இருக்காமல் தமிழ் மக்களது அபிலாஷைகளை பூர்த்திசெய்வதற்கு ஒரு புதிய அரசியல் சாசனம் கொண்டு வரப்பட வேண்டும். அது வெறுமனே சிங்கள மக்களது பிரச்சினையை தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கம் சரியான அறிவிப்புகளை வெளியிடுமாக இருந்தால் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியானது அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை உருவாக்கி முழுமையான சுயாட்சியை உருவாக்குவதற்கான கருத்துக்கள் அல்லது அறிக்கைகளை எல்லோருடனும் இணைந்து புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் குழுவிடம் கொடுப்போம். முதலாவது இந்த அரசாங்கம் குழுவை நியமிக்க வேண்டும். அதனை இரண்டு வருடத்திலா அல்லது மூன்று வருடத்திலா அல்லது உடனடியாக நியமிப்பார்களா என்பது எங்களுக்கு தெரியாது.

புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் பட்சத்தில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன் மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும். அவ்வாறு விடப்பட்டால் தான் அது நிறைவு பெறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவை திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த அரசாங்கம் விரைவாக புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். அப்போது தான் சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைபாடுகள் வரும். அதற்கு முன்பாக அரசியல் சாசனம் வர வேண்டும் என விருப்புகின்றோம்.

அதில் முக்கியமாக தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினைக்கு, பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக தமிழ் மக்கள் இந்த மண்ணில் முழுமையான சுயாட்சியோடு வாழ்வதற்கு தேவையான விடயங்களை உள்ளடக்கிய ஒரு அரசியல் சாசனமாக இருக்க வேண்டும் என நாம் பேசியுள்ளோம். இது தொடர்பில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோ.கருணாகரம், எம்.கே.சிவாஜிலிங்கம், ந.சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் ப.வேந்தன், பவான் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜனாதிபதி...

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய 12 ஜனாதிபதி வேட்பாளர்களில் எஞ்சிய ஐவர் மீது அடுத்த வாரம் வழக்கு தொடரப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஏழு ஜனாதிபதி வேட்பாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

செலவு அறிக்கை சமர்ப்பிப்பு கால எல்லை இறுதி நாளன்று வேட்பாளர் ஒருவர் தபால் மூலம் செலவு அறிக்கையை அனுப்பியதால் அவர் மீது வழக்கு தொடரப்படாது என தேர்தல் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் கூறினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர் மீது வழக்குத் தொடரப்பட்டால், அந்த வேட்பாளர் மாகாண சபை அல்லது உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராக நிற்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்திக் கூறியுள்ளது.

## மாகாண சபைத்...

இது தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த மாநாடு ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை விழுப்புரத்தில் கட்சியின் தேசிய மத்தியகுழு உறுப்பினர் பெ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத், பிருந்தா காரத், எம்.ஏ.பேபி, ஜி. இராமகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் உட்பட மத்திய குழு, மாநிலச் செயற்குழு, மாநிலக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களும் தமிழகம் முழுவதிலும் இருந்து 550க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கை தொடர்பிலான தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் முன்மொழிய தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் எம்.சின்னத்துரை வழிமொழிந்தார். இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் சமத்துவத்துடன் வாழவும் மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கலை உறுதிசெய்திடவும் கோரும் தீர்மானம் என்ற தலைப்பிலான அந்த தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமின்மைக்கும் நீண்டகாலமாக இனவெறித் தாக்குதலுக்கும் ஆளாகிவந்த நிலையில், அது உள்நாட்டு யுத்தத்துக்கும் அமைதியின்மைக்கும் வழிவகுத்தது. அதனால் அனைத்து பகுதி மக்களும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது இலங்கைத் தமிழர்கள் உட்பட அனைத்து சிறுபான்மைச் சமூகங்களினதும் ஆதரவுபெற்ற தேசிய மக்கள் சக்தி அமோக பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கிறது. இந்த சுமுகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி சமத்துவத்தையும் மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக் கலையும் உறுதிசெய்ய வேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருந்துவரும் மாகாண சபைத் தேர்தல்களை மிக விரைவாக நடத்தி மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாநாடு கேட்டுக்கொள்கிறது. இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறும்வகையில் உரிய பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வுகளைக் காணவேண்டும்.

மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தின்போது எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, நிலம், காவல்துறை போன்ற அம்சங்களில் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மாநாடு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

## புலமைப்பரிசில்...

திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த பணிகள் எதிர்வரும் 12ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி 2,849 பரீட்சை மத்திய நிலையங்களில், 2024ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டதுடன், அதில் 323,879 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குழந்தை...

நாட்டில் வருடாந்த குழந்தை பிறப்பு வீதம் சுமார் ஒரு இலட்சத்தால் குறைவடைந்துள்ளதாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மக்களிடையே தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டுமென விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

## கப்பம்...

அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தென்கொரிய தூதுவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையில் புதிய முதலீடுகளை செய்யுமாறு வெளிநாடுகளிடம் புதிய அரசு கோரிக்கை விடுத்து வரும் நிலையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக பல நாடுகள் இவ்வாறு முறைப்பாடுகளை இலங்கையிடம் கூற ஆரம்பித்துள்ளன.

இவ்வாறு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படியே புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

## அரிசி...

நாய்களும் இருந்ததால் லொறி உதவியாளர் மற்றும் சாரதியை பலாங்கொடை பொது சுகாதாரப் பாதுகாப்பு பரிசோதகர்கள் கைது செய்தனர்.

பலாங்கொடை நகரின் பிரதான பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள கடையொன்றுக்கு அருகில் லொறியை நிறுத்தி அரிசி மூடைகளை இறக்க முற்பட்டபோது, லொறியில் அரிசி மூடைகளுக்கு இடையில் நாய்கள் இரண்டு இருப்பதை கண்ட நகரை சேர்ந்த நபர் ஒருவர் அதனை தனது கைத்தொலைபேசியில் வீடியோ எடுத்து பொது சுகாதாரப் பாதுகாப்பு பரிசோதகர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து, லொறியை கைப்பற்றிய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த லொறியில் 21 இலட்சம் ரூபாவுக்கும் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பச்சையரிசி கையிருப்பு இருந்ததாகவும் இந்த லொறி திஸ்ஸமஹாராமவில் உள்ள அரிசி ஆலை ஒன்றுக்கு சொந்தமானது எனவும் விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எண்ணெய்...

தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 5000 கோடி ரூபா வற் வரியை செலுத்த தவறியுள்ளதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதம ஏற்பாட்டாளர் புத்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் சனிக்கிழமை(04) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் கடந்த ஜனவரி முதல் ஒக்டோபர் வரை 3900 கோடி கிலோ சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்துள்ளனர் என்றார்.

இலங்கையில் மூன்று பேருக்குச் சொந்தமான ஆறு நிறுவனங்களினால் இந்த வரி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த அவர், இவர்களில் போதைப்பொருள் கடத்தல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் உள்ளதாகத் தெரிவித்தார்.

உள்ளூர் கைத்தொழில்களுக்கு விதிக்கப்படும் வரியைப் போன்று தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்களுக்கும் வற் வரியை விதிக்கவும் இந்த நச்சு எண்ணெயால் மக்களின் ஆரோக்கியத்துக்கு ஏற்படும் பாதிப்பை அவர்களிடமிருந்து வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வரிப்பணத்தை ஏமாற்றுவதில் இவர்கள் மாத்திரம் தனியாக செயற்படுவதில்லை. இதற்காக அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் உதவியை நிச்சயம் மேற்படி இறக்குமதியாளர்கள் பெறுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளால் 90 சதவீத உள்ளூர் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. நான்கு இலட்சம் மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். உள்ளூர் தொழில்முனைவோர் அநாதரவாகியுள்ளனர் என்றார்.



# மதவாச்சி பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பது குறித்து கண்காணிப்பு விஜயம்





பயன்பாடின்றி சேதமடைந்து வரும் மதவாச்சி பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்காக வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

பொருளாதார மத்திய நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அதை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த பொருளாதார மத்திய நிலையத்தை இங்கு ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து, மதவாச்சி பிரதேச செயலாளர் சந்திரிகா மலேவியாராச்சி அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

இதில் மதவாச்சி பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார நவத்தன்னவும் கலந்துகொண்டார்.

# கல் குவாரி உரிமையாளர்களிடம் நிலுவைத் தொகையை வனத்துறை வசூலிக்காததால் அரசுக்கு ரூ. 4 கோடி இழப்பு

## கணக்காய்வு அறிக்கையில் தகவல்

நாட்டின் பல பகுதிகளில் உள்ள கல் குவாரி உரிமையாளர்களிடம் நிலுவைத் தொகையை வசூலிக்க வனத்துறை உரிய நடவடிக்கை எடுக்காததால், அரசுக்கு 04 கோடியே 69 இலட்சம் ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள குவாரி உரிமையாளர்கள் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை குவாரி உரிமையாளர்கள் 51 இலட்சம் ரூபாவுக்கும் அம்பாறை குவாரி உரிமையாளர்கள் 03 கோடியே 41 இலட்சம் ரூபாவுக்கும் மொனராகலை குவாரி உரிமையாளர்கள் 76 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை செலுத்தத் தவறியுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நுவரெலியா மாவட்ட அலுவலகப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆறு தொலைபேசி ஒலிபரப்புக் கோபுரங்களின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்காததன் மூலம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ள தாகவும் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது, திணைக்களத்தின் தற்போதைய ஒழுங்கற்ற தீ கட்டுப்பாட்டு திட்டங்கள் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பெருமளவிலான நிலம் தீயினால் சேதமடைவதை அவதானிக்க முடிந்தது.

துறையின் பல்வேறு பிரிவுகளில் 617 பணியிடங்கள் வெற்றிடமாகவுள்ளதாகவும் வலஸ்முல்ல மரக்கன்று உற்பத்தி செய்வதற்காக 1059 தொழிலாளர்கள் பணிபுரிந்து 18 இலட்சத்துக்கும் அதிகமான சம்பளம் பெற்றதாகவும் அவர்களில் 200 பேரின் பெயர்கள் வாக்காளர் பதிவேட்டில் சரியாக இல்லாததை அவதானித்ததாகவும் அந்த தொழிலாளர்கள் தானா என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை என்றும் கணக்காய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வனத்துறையின் 2023 ஆண்டு கணக்காய்வு அறிக்கையிலேயே இந்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

# திரிபோஷ நிறுவனத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம்

கந்தானையில் உள்ள 'திரிபோஷ' நிறுவனத்தை அரச நிறுவனமாக தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை மேம்படுத்தும் பல திட்டங்களுடன் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரிபோஷ நிறுவனத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தி நேற்று முன்தினம் (04) சுகாதார அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னைய நிர்வாகங்களால் முறையான, வேலைத்திட்டம் இல்லாததை எடுத்துக்காட்டிய அமைச்சர், இதனால் பொதுமக்களுக்கு திரிபோஷ நிறுவனத்தின் முழுப் பலன்களையும் இழக்க வழிவகுத்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், நாட்டின் ஊட்டச்சத்து சவால்களை எதிர்கொள்வதில் தீவிரமாக பங்களிக்கும் நிறுவனமாக திரிபோஷ நிறுவனத்தை மாற்றுவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக உறுதியளித்தார்.

திரிபோஷ நிறுவனத்தை மூடுவதற்கு பதிலாக, அதனை இலாபகரமான முயற்சியாக மாற்றுவதற்கு கட்டமைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமென அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக உள்ளூர் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருடன் கூட்டுறவை வளர்ப்பதும் உள்ளடங்கும். தொடர்ச்சியான கொள்முதல் முறை நிறுவப்படும் என்றும் திரிபோஷா நிறுவனத்துக்கு உள்ளூர் விற்பனை யாளர்களிடமிருந்து சோளம் மற்றும் சோயாவை பெறுவதற்கும் அதன்மூலம் விவசாய வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மற்றும் உருவாக்கவும் முடியும். இதனால் நிறுவனத்துக்கும் விவசாய சமூகத்துக்கும் இடையே பரஸ்பர நன்மை பயக்கும்.

# உலக சமய தினம் திருகோணமலையில்

**எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும்**

(பதுர்தீன் சிஹானா)

பல்வேறு மதங்கள் மற்றும் பின்னணியில் உள்ள மக்களிடையே புரிந்துணர்வையும் அமைதியையும் மேம்படுத்தும் நோக்கில் உலக சமய தினம் திருகோணமலையில் கொண்டாடப்படவுள்ளது.

யானா அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி இந்நிகழ்வு நகர சபை பிரதான மண்டபத்தில் காலை 09:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


உலக மத தினம், ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. இது பல்வேறு நம்பிக்கைகளுக்கு இடையே புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

யானா அறக்கட்டளை அமைப்பானது திருகோணமலையில் இந்த நிகழ்வை இரண்டாவது தடவையாக நடத்துவதுடன், சமய உரையாடல் மூலம் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான அதன் பணியைத் தொடர்கிறது.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பேச்சாளர்கள் பங்குபற்றவுள்ளதுடன், அவர்கள் மத நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகள் பகிர்ந்து கொள்ளும் பொதுவான விழுமியங்கள் பற்றிய தங்கள் நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள் எனவும் யானா அறக்கட்டளை அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்து மதம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் பஹாய் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளதுடன் ஒவ்வொரு பாரம்பரியத்தின் செழுமையையும் அனுபவிக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும் இந்த நம்பிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கலாசார நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கும்.

# யாழில் கஜமுகசங்கார உற்சவம்




(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானம் மற்றும் மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்திலும் கஜமுகசங்கார உற்சவம் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

விநாயகர் விரதத்தின் 20ஆம் நாளான நேற்று முன்தினம் (04) இலட்சார்ச்சனை நிறைவு உற்சவம், விசேட ஹோமப் பூசைகள் நடைபெற்றதுடன், மாலை கஜமுகசங்காரம் நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்த சூரசங்காரத்தை கண்டு களித்ததுடன், விநாயகப் பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர்.

இதன்போது பாரம்பரிய மானாட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சிலம்பம், பொய்க்கால் நடனம் மற்றும் கரகம் என்பன நடைபெற்றன.

# காட்டு யானைகளை விரட்ட GPS தொழில்நுட்பம்

அநுராதபுரத்தின் பல பகுதிகளில் வில்பத்து வரையான பிரதேசங்களில் காட்டு யானைகளை விரட்டுவதற்கு GPS தொழில்நுட்பத்தை பயன்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, காட்டு யானைகளுக்கு GPS தொழில்நுட்பம் கொண்ட பட்டிகளை அணிவிக்கும் நடவடிக்கை ஓயாமடுவயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் வனவிலங்கு அதிகாரிகள், இலங்கை கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகளால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காட்டு யானைகள் நடமாடும் இடங்களை கண்டறிந்து அவற்றின் வழித்தடங்களை ஆய்வு செய்யும் நோக்கத்தில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

கணக்கெடுப்புகளின்படி, இலங்கையில் பயிர்களை சேதப்படுத்தும் விலங்குகளில், யானைக்கு முக்கிய இடம் உண்டு. அதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், தீவின் பல பகுதிகளில் இருந்து தினமும் காட்டு யானை சேதங்கள் பதிவாகி வருகின்றன.

அதன்படி, அநுராதபுரம் மாவட்டத்தில் பயிர்ச் சேதம் அதிகம் உள்ள காப்புக்காடுகளில் காட்டுயானைகளை விரட்டும் நடவடிக்கை தொடங்கப்பட்டது.

அதற்கமைவாக அநுராதபுரம் காட்டு யானைகளை வில்பத்து தேசிய பூங்காவுக்கு விரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அப்பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டதன் மூலம் பல பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையிலேயே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

# இலங்கை வரும் ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதியளிக்க அரசாங்கம் அவதானம்

இலங்கை வருவதற்கு அனுமதி கோரும் உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்களுக்கு நிலையான மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையின் கீழ் அனுமதியளிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைவாக விசேட விதிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் வரும் உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடை கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இந்த தடையை முந்தைய அரசாங்கம் விதித்திருந்தது.

எவ்வாறாயினும், உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதால் ஏற்படக்கூடிய இராஜதந்திர நெருக்கடிகளை தவிர்க்கும் வகையில் பொதுவானதொரு மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்பு குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

எனவே புதிய விதிமுறையை அறிமுகப் படுத்தும்வரை எந்தவொரு உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்களும் இலங்கை விஜயத்துக்கு அனுமதி கோராது என்று நம்புவதாக அரசாங்கத்தின் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

**பெண் சமையல்காரர் தேவை**

**அனைத்து வகையான உணவு வகைகளையும் தயாரிக்கும் சிறந்த பெண் சமையல்காரரைத் தேடுகிறோம். தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.**

**ஆர்வமுள்ளவர்கள் 0112249531/76 8041212 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி 06ஆம் திகதி, திங்கட்கிழமை

# மாணவர்களும் போதைப்பொருளும்!

பாடசாலை மாணவர்களிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பல்வேறு வகையான சிகரெட்டுகளை மாணவர்கள் பாவிப்பது ஆபத்தானதென கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறுவர் மனநல சிகிச்சை நிலையங்களுக்கு வரும் சிறுவர்களில் பலர் புகையிலை தொடர்பான பல்வேறு பொருட்களை அதிகளவில் பயன்படுத்துவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக விசேட மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்தார். இவ்விடயத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலை மாணவர்களிடையே புகையிலைப் பாவனை அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச்சபை கடந்த வருடம் எச்சரித்திருந்ததையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

ஒரு மனிதனுடைய வாழ்வில் மிகவும் முக்கியமான ஒரு பருவம் என்றால் அது மாணவப் பருவம் தான்.

கல்வி கற்று அதன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவை வைத்து சமூகத்துக்குள் ஒரு சிறந்த மனிதனாய் தன்னால் முடிந்த பங்களிப்பைச் செலுத்த முடியும். சமீப காலமாகவே இந்த மாணவர் சமுதாயத்தை போதை என்ற விடயம் ஆட்டிப் படைக்கின்றது. பல மாணவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி தமது வாழ்க்கையைத் தொலைத்து வருகின்றனர்.

இதற்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் சில மாணவர்கள் போதை மாத்திரைகளை உட்கொண்டு, இன்னும் ஒரு படி மேலே போய் போதை ஊசிகளையும் செலுத்திக்கொள்கின்றனர். மாணவ சமுதாயத்தினரிடையே இந்தப் போதைப்பழக்கமானது வெகுவாகத் தீவிரமடைந்து வருகின்றது. பெற்றோர் இந்த விடயத்தில் தத்தமது பிள்ளைகளின் மேல் மிகுந்த கவனஞ்செலுத்த வேண்டும்.

போதைப்பொருட்களை விற்பனை செய்யும் இந்த சமூக விரோதக் கும்பலானது, பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களை இலக்கு வைத்து தமது தேவைகளை நிறைவேற்றி வருகிறது. யாராவது ஒரு மாணவனிடம் நட்பை வளர்த்து அவர் மூலமாக ஏனைய மாணவர்களுக்கும் போதை மாத்திரைகளை விற்பனை செய்கின்றது. அதற்குரிய பணத்தை ஒன்லைன் மூலம் குறிப்பிட்ட வங்கி எண்ணுக்கு செலுத்தியதன் பின்னர் போதை மாத்திரைகள் குறிப்பிட்ட மாணவர்களைச் சென்றடையும்.

ஆரம்பத்தில் இந்தப் போதைப்பழக்கமானது விளையாட்டாக ஆரம்பிக்கப்பட்டாலும் போகப்போக அதற்கு அடிமையாக்கி விடுகிறது. முன்பெல்லாம் பாடசாலைக் காலத்தில் மது பாவனை, சிகரெட் பாவனை பெரும் தவறாகப் பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது போதை மாத்திரை, போதை ஊசி என்பன சர்வசாதாரணமாகிவிட்டன.

தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் அனுப்பும் பெற்றோர்களின் நம்பிக்கையும் தற்சமயம் கேள்விக்குறியாகியுள்ளது. இத்தகைய நிலைமையில் கல்வியில் மட்டும் கவனஞ்செலுத்தும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால், மாணவர்கள் தவறான வழியில் செல்வதால் இதுபோன்ற போதைவஸ்து பாவனையால் பெற்றோர்களின் கனவும் கலைந்து செல்கிறது.

மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் இதுபோன்ற சமூகவிரோத கும்பல்களைப் பிடித்து தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பது பொதுமக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

சுய ஒழுக்கமின்மை மற்றும் தனிப்பட்ட நபர்களின் சுய இலாபம் என்பவற்றால் ஒரு சமுதாயமே பாதிக்கப்படுகின்றது. பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டுமென பெற்றோர் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். ஆனால், தீய நண்பர்களுடன் சேர்ந்து சில மாணவர்கள் தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

ஒரு மாணவன் தவறான பாதைக்குச் செல்கிறானென்றால் அவனது பெற்றோரின் கவனக் குறைவும் ஒரு காரணமாகும். பிள்ளைகள் வளர்ந்ததும் உறவுகளை மறந்து கொண்டாட்டம் மட்டுமே வாழ்க்கை என யோசிக்கத் தொடங்குகிறார்கள். தீய நண்பர்களுடன் சேர்ந்து தேவையற்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அதைத் தட்டிக்கேட்கும் பட்சத்தில் பெற்றோரைத் தாக்கும் அளவுக்கு போதை கண்ணை மறைத்து விடுகிறது.

தற்பொழுது பாடசாலைகளில் விளையாட்டுகளுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை விட, மதிப்பெண்களிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். பாடசாலைகளில் விளையாட்டை ஊக்குவித்தால் போதைப்பழக்கத்திலிருந்து பல இளைஞர்களைக் காப்பாற்ற முடியும். மாணவர்களின் பெற்றோரும் கவனமாக இருக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனைக்கு உட்படுத்த போதைப்பொருள் வியாபாரிகள் பல்வேறு யுக்திகளைக் கையாள்வதனால் நாள் ஒன்றுக்கு அண்ணளவாக 80 மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாவதாக தகவலொன்று கூறுகிறது. இந்த நிலையை நீடிக்க விடலாமா?

# ஆபத்தில் கல்வி: பாடசாலை இடைவிலகலுக்குப் பின்னாலுள்ள மறைக்கப்பட்ட காரணங்கள்



கல்வி பெரும்பாலும் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சியின் அடிக்கல்லாகக் கருதப்படுகிறது. ஆயினும்கூட, உலகம் முழுவதிலும் ஒரு கவலைக்குரிய விடயம் யாதெனில், வறுமை, குடும்பச் சூழல், கல்வி முறை, பாடசாலைகளில் மாணவர்கள் மீது காட்டப்படும் பாகுபாடு, அகதி வாழ்வு, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் தவிர்க்க முடியாத காரணங்களால் இளம் மாணவர்கள் முன்கூட்டியே பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்கள். அத்துடன், உயர்க்கல்வியைத் தொடர முடியாமல் போகிறார்கள். இந்த நிகழ்வு சமூகத்தில் அதன் நீண்டகாலத் தாக்கம் குறித்து குறிப்பிடத்தக்க கவலைகளை எழுப்புகிறது. சிக்கலைத் திறம்படத் தீர்க்க இந்தப் போக்கின் பின்னணியில் உள்ள காரணங்களையும் அத்தகைய முடிவுகளைப் பாதிக்கும் உளவியல் காரணிகளையும் ஆராய்வது அவசியமாகும். ஆபத்தான பாடசாலை இடைவிலகல் விகிதம் பல நாடுகளில் குறிப்பாக, கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. யுனெஸ்கோவின் கூற்றுப்படி 2022ஆம் ஆண்டில் உலகளவில் 06 முதல் 18 வயதுக்குட்பட்ட 244 மில்லியன் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பாடசாலைகளை விட்டு விலகியிருந்தனர். இந்தப் பிரச்சினை தனிப்பட்ட எதிர்காலத்தை மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக ஸ்திரத்தன்மை மற்றும் கலாசார முன்னேற்றத்தையும் பாதிக்கிறது.

**மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுவதற்கான காரணங்கள்**

**01. நிதிக் கட்டுப்பாடுகள்**

மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுவதற்கு முக்கிய காரணம் வறுமையேயாகும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடும் குடும்பங்கள் பெரும்பாலும் கல்வியை விட வருமானம் ஈட்டுவதையே முதன்மைப்படுத்துகின்றன. குழந்தைகள் வேலை செய்வதன் மூலமோ அல்லது உடன்பிறந்தவர்களைக் கவனித்துக்கொள்வதன் மூலமோ நிதிப் பங்களிப்புச் செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். படிப்பு, சீருடை, புத்தகம், போக்குவரத்து உள்ளிட்ட கல்விச் செலவுகள் பலருக்கு கட்டுப்படியாகாத ஆடம்பரமாகி விடுகின்றன.

**02. தரமான கல்விக்கான அணுகல் இல்லாமை**

தொலைதூர அல்லது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகள் பெரும்பாலும் குறைவான நிதியுதவி, வளங்கள் பற்றாக்குறை மற்றும் தகுதியற்ற ஆசிரியர்களால் பணியாற்றப்படுகின்றன. இதனால் தகுந்த கல்வி கற்கும் சூழல் இல்லாததால் மாணவர்கள் தொடர்ந்து படிப்பதை இடைநிறுத்திக்கொள்கின்றனர். தரமான கல்வி கிடைக்காமையால் பல மாணவர்கள் பாடசாலையில் தங்கியிருப்பதன் மதிப்பைக் காணத் தவறிவிடுகிறார்கள்.

**03. கொடுமைப்படுத்துதல் மற்றும் சமூக அழுத்தங்கள்**

உலகெங்கிலும் உள்ள பாடசாலைகளில் கொடுமைப்படுத்துதல் மற்றும் சமூகப் புறக்கணிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க பிரச்சினைகளாக உள்ளன. பாதுகாப்பற்றதாகவோ அல்லது விரும்பத்தகாததாகவோ உணரும் மாணவர்கள் விலகுவதற்கும் வெளியேறுவதற்கும் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. சகாக்களின் அழுத்தம், நம்பத்தகாத எதிர்பார்ப்புகள் மற்றும் உணர்ச்சிபூர்வமான ஆதரவின் பற்றாக்குறை ஆகியவை இந்தச் சிக்கல்களை அதிகரிக்கின்றன. இதனால் மாணவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

**04. குடும்பப் பிரச்சினைகள்**

செயலற்ற குடும்ப இயக்கவியல், பெற்றோரின் புறக்கணிப்பு அல்லது துஷ்பிரயோகம் ஆகியவை மாணவர்களின் மன உளைச்சலுக்கு வழிவகுக்கும். இது கல்வியில் கவனஞ்செலுத்தும் அவர்களின் திறனைப் பாதிக்கலாம். சில சமயங்களில் சமூக விதிமுறைகள் மற்றும் ஆரம்பகால திருமணம் போன்ற கலாசார நடைமுறைகள், மாணவர்களை, குறிப்பாக பெண்களை தங்கள் படிப்பைக் கைவிடும்படி கட்டாயப்படுத்துகின்றன.

**05. பாரம்பரிய கற்றலில் ஆர்வமின்மை**

பல மாணவர்களுக்கு பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகள் அவர்களை ஈடுபடுத்தத் தவறிவிடுகின்றன. நிஜ-உலகப் பயன்பாடுகளுக்குப் பொருத்தமின்மையானது கல்வி அவர்களின் அபிலாஷைகளிலிருந்து துண்டிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இதன் விளைவாக மாணவர்கள் ஏமாற்றமடைந்து கல்வியைத் தொடர்வதற்கு ஊக்கமில்லாமையை உணர்கிறார்கள்.

**06. மனநல சவால்கள்**

கவலை, மனச்சோர்வு, மன அழுத்தம் போன்ற உளவியல் பிரச்சினைகள் மாணவர்களிடையே அதிகரித்து வருகின்றன. தனிப்பட்ட போராட்டங்களோடு சேர்ந்து கல்வியில் செயற்பட வேண்டிய அழுத்தம், அடிக்கடி தீக்காயத்துக்கு வழிவகுக்கிறது.

சரியான மனநல ஆதரவு இல்லாமல் மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

**07. தொழில்நுட்பக் கவனச்சிதறல்கள்** டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் பெருக்கம் புதிய கவனச்சிதறல்களை உருவாக்கியுள்ளது. சில மாணவர்கள் ஒன்லைன் நடவடிக்கைகளில் மூழ்கிப் படிப்பதில் ஆர்வத்தை இழக்கிறார்கள். இது மோசமான கல்வி, செயற்றிறன் மற்றும் இறுதியில் இடைநிறுத்தத்துக்கு வழிவகுக்கிறது.

இவ்வாறான போக்கின் பின்னால் உள்ள உளவியல் காரணிகள் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் உளவியலைப் புரிந்துகொள்வது சிக்கலைத் திறம்பட எதிர்கொள்ள முக்கியமானது. அவர்களின் முடிவுகளை வடிவமைப்பதில் பல காரணிகள் பங்கு வகிக்கின்றன:

**01. உதவியற்ற உணர்வு**

பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் பெரும்பாலும் வறுமையின் சுழற்சியில் சிக்கிக் கொள்கிறார்கள். கல்வி அவர்களின் சூழ்நிலையை மாற்றாது என்று அவர்கள் நம்புகிறார்கள். இது நம்பிக்கையின்மை மற்றும் உயர் படிப்பைத் தொடர ஆர்வமின்மைக்கு வழிவகுக்கும்.

**02. சுய-செயற்றிறன் இல்லாமை**

சுய-செயற்றிறன் என்பது ஒரு நபரின் வெற்றியின் திறனைக் குறிக்கிறது. குறைந்த சுயமரியாதை உள்ள மாணவர்கள் அல்லது மீண்டும் மீண்டும் கல்வித் தோல்விகளை எதிர்கொள்பவர்கள். தாங்கள் பாடசாலைக்குப் ‘போதுமானவர்கள்’ இல்லை என்ற எண்ணத்தை உள்வாங்கிக் கொள்கின்றனர். இந்த எதிர்மறையான சுய-கருத்து அவர்கள் கல்வியைக் கைவிடத் தூண்டுகிறது.

**03. உடனடி மனநிறைவு**

நவீன உலகம் உடனடி மனநிறைவை வலியுறுத்துகிறது. கல்வி போன்ற நீண்ட கால இலக்குகளை ஈர்க்கவில்லை. பல மாணவர்கள் உடனடி வெகுமதிகளை விரும்புகிறார்கள். அதாவது, ஒரு வேலையின் மூலம் பணம் சம்பாதிப்பது, பாடசாலைப்படிப்பில் நேரத்தை முதலீடு செய்வது, இது தொலைதூர எதிர்காலத்தில் மட்டுமே நன்மைகளை உறுதியளிக்கிறது.

**04. சக செல்வாக்கு**

இளம் பருவத்தினர் குறிப்பாக, சகாக்களின் அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களது நண்பர்கள் அல்லது சமூகக் குழுக்கள் கல்வியை மதிப்பிழக்கச் செய்தாலோ அல்லது ஏற்கனவே கல்வியைக் கைவிட்டிருந்தாலோ மாணவர்கள் அதைப் பின்பற்றலாம் அல்லது ஒதுக்கப்படுவதைத் தவிர்க்கலாம்.

**05. உணர்ச்சி மன அழுத்தம்**

குடும்ப மோதல்கள், முறிவுகள், பெற்றோரின் விவாகரத்து அல்லது அடையாள நெருக்கடிகள் உள்ளிட்ட தனிப்பட்ட போராட்டங்கள் மாணவர்களை மூழ்கடிக்கலாம். சரியான சமாளிக்கும் வழிமுறைகள் அல்லது ஆதரவு அமைப்புகள் இல்லாமல், கல்வி பெரும்பாலும் இந்த அழுத்தமான உணர்ச்சிப் பிரச்சினைகளுக்கு பின் இருக்கையை எடுக்கும். சமுதாயத்தில் சிற்றலை விளைவு பள்ளிப் படிப்பை இடைநிறுத்துவதால் ஏற்படும் விளைவுகள் தனிநபருக்கு அப்பாற்பட்டவை.

அதிக இடைவிலகல் விகிதங்களைக் கொண்ட சமூகங்கள் அதிகரித்த வேலையின்மை, வறுமை மற்றும் குற்றங்கள் போன்றவற்றை எதிர்கொள்கின்றன. குறைந்த கல்வியறிவு பெற்ற மக்களும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கேற்ப போராடுகிறார்கள்; பொருளாதார போட்டித்தன்மையைக் குறைக்கிறார்கள். கூடுதலாக, உடல்நலம், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாதது சமூக ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது.

**06. நிதி ஆதரவை வலுப்படுத்துதல்**

வறுமை கல்விக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அரசும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் நிதியுதவி, கல்வி உதவித்தொகை மற்றும் மானியங்களை வழங்க வேண்டும். இலவச போஷாக்கு உணவுத் திட்டங்கள் மற்றும் மலிவான போக்குவரத்து வசதி ஆகியவை மாணவர்களின் வருகையை ஊக்குவிக்கும்.

**07. பாடசாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்**

பாடசாலை வசதிகளில் முதலீடு செய்தல், தகுதியான ஆசிரியர்களை பணியமர்த்துதல் மற்றும் பாடத்திட்டங்களை நவீனமயமாக்குதல் ஆகியவை மிகவும் ஈடுபாட்டுடன் பயனுள்ள கற்றல் சூழலை உருவாக்கலாம்.

**08. கொடுமைப்படுத்துதல் மற்றும் மன ஆரோக்கியம்**

பாடசாலைகள், கொடுமைப்படுத்துதல்-எதிர்ப்புக் கொள்கைகளை நிறுவ வேண்டும் மற்றும் மனநல ஆதாரங்களுக்கான அணுகலை வழங்க வேண்டும். ஆலோசனைச் சேவைகள் மாணவர்களுக்கு தனிப்பட்ட மற்றும் கல்வி சார்ந்த அழுத்தங்களைச் சமாளிக்க உதவும்.

**09. சமூக விழிப்புணர்வை ஊக்குவித்தல்** கல்வியின் நீண்டகால நன்மைகள் குறித்து பெற்றோர்களுக்கும் சமூகங்களுக்கும் போதிப்பது மிகவும் முக்கியமானது. பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள், குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு கலாசார விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை அவரவர் பின்பற்றும் மதங்களின் போதனைகளுக்கேற்ப மாற்றலாம்.

**10. தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வியைத் தயார்படுத்துதல்**

தொழிற்பயிற்சி, அனுபவக் கற்றல் மற்றும் நெகிழ்வான பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவது போன்ற பல்வேறு ஆர்வங்கள் மற்றும் திறன்களைக் கொண்ட மாணவர்களைப் பூர்த்தி செய்ய முடியும். கல்விக்கான நிஜ-உலகப் பயன்பாடுகளை வழங்குவது அதை மிகவும் பொருத்தமானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் மாற்றும்.

**11. டிஜிட்டல் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல்**

அதிகப்படியான திரை நேரத்தைக் கட்டுப்படுத்தவும் தொழில்நுட்பத்தின் உற்பத்திப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் பெற்றோர்களும் பாடசாலைகளும் இணைந்து செயற்பட வேண்டும். கற்றல் அனுபவங்களை மேம்படுத்த டிஜிட்டல் கருவிகளும் பயன்படுத்தப்படலாம்.

முடிவாக பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் நெருக்கடியானது பொருளாதார சமூக மற்றும் உளவியல் காரணிகளில் வேரூன்றிய பலதரப்பட்டதாகும். இந்தச் சிக்கலைத் தீர்க்க நிதி, கல்வி மற்றும் உணர்ச்சிபூர்வமான ஆதரவை ஒருங்கிணைக்கும் ஒரு முழுமையான அணுகுமுறை தேவைப்படுகிறது. பாடசாலை இடைநிற்றலுக்கான காரணங்கள் மற்றும் உளவியல் அடிப்படைகளைப் புரிந்துகொள்வதன் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் முழுத் திறனை அடைவதற்கான வாய்ப்பை உறுதிசெய்ய பயனுள்ள தீர்வுகளை நாம் செயற்படுத்தலாம். அப்போதுதான் கல்வி வளர்ச்சிக்கும் சமத்துவத்துக்கும் அடித்தளமாக விளங்கும் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இம்தியாஸ் ஹசன்

## இன்றைய நாளில்..

- 1838 – அல்பிரட் வோல் என்பவர் மோர்ஸுடன் இணைந்து தொலைத்தந்தியை முதன்முறையாக வெற்றிகரமாகச் சோதித்தார். இது மோர்ஸ் தந்திக்குறிப்பு உருவாக்கத்துக்கு வழிவகுத்தது.
- 1912 – கண்டப்பெயர்ச்சி பற்றிய முதலாவது ஆய்வை ஜேர்மனிய புவியியல் இயற்பியலாளர் அல்பிரட் வெக்னர் வெளியிட்டார்.
- 1929 – அன்னை தெரேசா இந்தியாவின் வறிய மற்றும் நோயுற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக கொல்கத்தாவைச் சென்றடைந்தார்.
- 1946 – வியட்நாமில் முதல் தடவையாக பாராளுமன்றத் தேர்தல்கள் இடம்பெற்றன.
- 1947 – உலகைச் சுற்றி வருவதற்கான முதலாவது பயணச்சீட்டை பான் அமெரிக்கன் எயார்வேய்ஸ் விற்பனைக்கு விட்டது.
- 1989 – இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைப் படுகொலை செய்த சத்வந்த் சிங், கேகார் சிங் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அன்றே அவர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

**எதிர்க்கட்சிக்குள்ள பல அணிகள் உருவாகிட்டுதாம்... இப்படி செய்தியை கேள்விப்பட்ட பிறகுதான் நாட்டில எதிர்க்கட்சி என்ற ஒன்று இருக்கிறதே தெரியுது...**



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மார்கழி மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் சுகயீனங்கள் ஏற்படலாம். தொழிலில் அக்கறை வேண்டும்.

**ரிஷபம்** வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். கேட்ட உதவி கிடைக்கும்.

**மிதுனம்** தொழில் வியாபாரங்கள் சிறக்கும். உங்கள் கீர்த்தி, செல்வாக்கு உயரும். அரச வகையில் மேன்மை.

**கடகம்** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மை உண்டு. புதிய நண்பரைச் சந்திப்பீர்கள். தேவைக்காகப் பணம் கிடைக்கும்.

**சிம்மம்** வீண் பணவிரயம் ஏற்படும். கோபத்தால் பொருமை இழந்து விடாதீர்கள். தொலைதூர பயணங்கள் வேண்டாம்.

**கன்னி** காதல், திருமணம் கைகூடி வரும். மனம் சற்றுத் தட்டுத்தடுமாறி இயங்கிக் கொண்டிருக்கும்.

**துலாம்** நினைத்த காரியத்தில் வெற்றி.நோய், கடன் நிவர்த்தி. எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நோய்களால் சற்று தொல்லை உண்டு. கவனம்.

**தனுசு** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். உடல் நலனில் அக்கறை வேண்டும்.

**மகரம்** காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய துணிமணிகள் வாங்கி அணிவீர்கள். மன மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

**கும்பம்** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயற்படவும்.

**மீனம்** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். நினைத்தது நடக்கும்.

| | |
|---|---|
| **மிதிதி** | : சப்தமி மு.இ.6.23 வரை பின் அட்டமி |
| **நட்சத்திரம்** | : உத்திரட்டாதி மு.இ.7.06 வரை பின் ரேவதி |
| **பிறை** | : வளர்பிறை |
| **யோகம்** | : மரண யோகம் மு.இ.7.06 வரை பின் அமிர்த யோகம் |
| **வார சூலை** | : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை-6.23–7.23 மணி வரை பகல்- 1.23 – 2.23 மணி வரை மாலை- 3.23–4.23 மணி வரை |
| **ராகு காலம்** | : 7.53 – 9.23 மணி வரை |
| **எமகண்டம்** | : 10.53–12.23 மணி வரை |
| **குளிகை** | : 1.53 – 3.23 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று முன்னிரவு 7.06 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 7.06 மணிக்கு மேல்**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.

**விஷேட தினம்** : ---

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# அரசியலிலும் ஊடகத்துறையிலும் இன்று ஒழுக்கமில்லை; நாட்டில் உள்ள சட்டங்கள் யாவருக்கும் பொதுவானவை

## விவசாய அமைச்சர் லால்காந்த

*ஜே.எம்.ஹாபீஸ்*



அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய இவ்விரண்டு துறைகளிலும் இன்று ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுவது குறைந்துள்ளதென விவசாய, நீர்ப்பாசன, கமநலசேவைகள், மிருகவள அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

''அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய இரு துறைகளிலும் இன்று ஒழுக்கம் பேணப்படாத காரணத்தால் தாம் விரும்பிய விதத்தில் ஊடகங்கள் தொழிற்படுகின்றன. சில ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் போலிப் பிரசாரம் காரணமாக பொதுமக்கள் முரண்பாடுகளை எதிர்கொள்ளவேண்டி வருகிறது. எனவே, ஊடகவியலாளர்களையும் ஊடக நிறுவனங்களையும் சரியான பாதையில் நெறிப்படுத்த நிபுணத்துவம் கொண்டவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வழிசெய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள சட்டங்கள் யாவருக்கும் பொதுவானவை. குறிப்பிட்ட சட்டங்கள் சில ஊடகவியலாளர்களுக்கு பொருந்தாது என்று எந்த நாட்டிலும் சட்டங்கள் இல்லை. அரசியலில் இன்று ஒழுக்க நெறி தவறியுள்ளது போல் ஊடகத்திலும் ஒழுக்கநெறி தவறவிடப்பட்டுள்ளது. எனவே, ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து தமக்குத் தாமே ஒரு சிறிய ஒழுக்க விதிகளை அமைத்துக் கொள்வது நல்லது. சரியான பாதையில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

எந்தவொரு தொழிலிலும் சட்ட ரீதியில் ஏதும் தவறு ஏற்பட்டால் அது தொடர்பாக தொழிற்படுவதற்கான உரிமை பொதுமக்களுக்கு இருக்க வேண்டும். ஊடகம் காரணமாக இந்நாட்டு மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அநேகம் உள்ளன. பெண்கள் துஷ்பிரயோகம், கொலை போன்றவற்றை ஊடகங்கள் அறிக்கையிடும் விதத்தைப் பார்த்தால் இது நன்கு புரியும். நீதிமன்றம் குற்றவாளியாக்க முன்பே சில ஊடகங்கள் சிலரைக் குற்றவாளிகளாக ஆக்கிவிடுகின்றன.

வீதிப் போக்குவரத்தில் ஏற்பட்ட விபத்து பற்றி பொலிஸார் நீதிமன்றில் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முன்பே சில ஊடகங்கள் குற்றவாளி எனச் சிலரை இனம் காட்டி முத்திரையும் குத்திவிடுகிறது.


அரசியல்வாதியொருவர் அல்லது பிரபல்யம் பெற்ற ஒருவர் சென்ற வாகனமொன்றில் ஏதும் விபத்து நடந்துவிட்டால் சில ஊடகங்கள் அரசியல்வாதி அதனைச் செய்ததாக முத்திரை குத்தி விடுகின்றன. சிலநேரம் அது குறிப்பிட்ட அந்த நபருக்கு சம்பந்தமில்லாமலும் இருக்கலாம். சில ஊடகங்கள் வேண்டுமென்றே பொய்க் கூற்றுகளை வெளியிடுகின்றன.

நாட்டிலுள்ள சமூக ஊடகங்கள் சிலவற்றுக்கு எந்தச் சட்ட விதிகளும் ஒழுங்குகளும் இல்லை. கண்டபடி பிரசுரம் செய்கின்றன. இப்படியாக பல விடயங்களைக் குறிப்பிடலாம். எனவே, சட்டவரையறை, ஒழுக்கம் என்பவற்றை ஊடகங்கள் பேணிக்கொள்ள முயற்சிக்க வேண்டும்''- என்றார்.

# தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா யுத்த அகதிகளை அவர்களின் விருப்பமின்றி நாடு கடத்தவேண்டாம்

## முஜீபுர் ரஹ்மான் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

*எம்.எஸ்.எம்.முன்தஸிர்*



எமது நாட்டில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா யுத்த அகதிகளை அவர்களின் விருப்பமின்றி மியன்மாருக்கு நாடு கடத்தவேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

மியன்மாரில் இடம்பெறும் போர் அச்சம் காரணமாக தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள தப்பியோடும் இந்த அப்பாவி அகதிகள் 103 பேரில் நாற்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகளும் சிறுவர்களும் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளதுடன், பாதுகாப்பான தேசமொன்றில் அரசியல் புகலிடம் பெற்றுக்கொள்வதுதான் இந்த அப்பாவி அகதிகளின் நோக்கமாகுமெனவும் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகளின் விபரங்களை மியன்மாருக்கு கையளிப்பதன் மூலம் இவர்களுக்கு மாத்திரமன்றி, அங்கு வதியும் இவர்களின் உறவினர்களுக்கும் பாரிய நெருக்க டிகளை ஏற்படுத்துவதுடன் உயிர் அச்சுறுத்தலாகவே அமையுமென்பது எமது பலமான நம்பிக்கையாகும்.

ஏதேனும் தேசமொன்றில் ஆபத்துகளை எதிர்கொள்ளும் அச்சம் மற்றும் எச்சரிக்கை கொண்ட நபர்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களின் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் (Non-Refoulement) சர்வதேச சட்ட நியதிகளுக்கு எதிரான செயற்பாடாகும். இந்த அகதிகளை அவர்கள் வெளியேறிய நாட்டின் பயங்கர வலைக்குள் மீள அனுப்புவதன் மூலம் சர்வதேச மட்டத்தில் எமது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்யா அகதிகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இன்னுமொரு நாட்டுக்குப் போகும் வரையில் இங்கு அவர்களுக்கு வசதிகள் வழங்கப்படல் வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாத்து அப்பாவி களுக்கு கைகொடுக்கும் எமது நாட்டின் சிறந்த மானிடப் பண்பாட்டை உலகத்துக்கு எடுத்துக்காட்டாக இந்த அப்பாவி மக்களுக்கு கைகொடுத்தல் வேண்டும். இந்த மனிதநேய செயற்பாட்டுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மாத்திரமன்றி எதிர்க்கட்சியின் ஆதரவும் உங்களுக்கு கிடைக்குமென்பது எமது நம்பிக்கையாகுமெனவும் ஜனாதிபதிக் கான வேண்டுகோளில் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைத்துப்பாக்கி - தோட்டாக்களுடன் சீனிகம பகுதியில் இருவர் கைது



சீனிகம பிரதேசத்தில் இரண்டு கைக்குண்டுகள், 8 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி, T-56 ரக ரவைகள் 66 என்பவற்றை வைத்திருந்த இருவர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்துக்கு (PNB) கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பது குறித்த முறைப்பாடுகளைத் தெரிவிக்க பொதுமக்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

பொதுமக்கள் 071 8596476 என்ற தொடர்பு இலக்கத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரியைத் தொடர்பு கொண்டு தங்களது முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்.

இதேவேளை, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை தங்காலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (04) பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தங்காலை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் (STF) அதிகாரிகள் குழுவினால் ஒகேவெல வத்துமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



**இனிய நந்தவனத்தின் 28ஆவது ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை மாலை திருச்சிராப்பள்ளி பிறீஸ் ஹோட்டலில் நடைபெற்றபோது மலரின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், நந்தவனம் ஆசிரியர் சோ.சந்திரசேகரிடமிருந்து பெறுவதையும் அருகில் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் தே.செந்தில்வேலவர் இருப்பதையும் படத்தில் காணலாம்.**

# க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் வாகன விபத்து - போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த இரண்டு விசேட திட்டங்கள் அமுல்

க்ளீன் ஸ்ரீலங்கா (Clean Sri Lanka) திட்டத்தின் கீழ் வாகன விபத்துகள் மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் இரண்டு விசேட போக்குவரத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதில் முதலாவது நடவடிக்கையாக பல்வேறு விதமான வாகன ஒலிகளைக் கட்டுப்படுத்தல், அதிக சத்தத்தில் ஒலி எழுப்புதல், ஒலி எழுப்பும் சைலன்சர்கள் பொருத்துதல், விபத்துகள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் பல வண்ணங்கள் கொண்ட விளக்குகளைப் பொருத்துதல், சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட வாகனங்கள் என்பன தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது.


இரண்டாவது நடவடிக்கையாக, பொதுப் போக்குவரத்து பஸ் சாரதிகள் செய்யும் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிய இரகசிய அதிகாரிகளை நியமித்து, விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (04) முதல் எதிர்வரும் 19ஆம் திகதிவரை இரண்டு வாரங்களுக்கு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்போது வாகனச் சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக உதிரிப்பாகங்களை குறிப்பிட்ட காலத்துக்குள் அகற்றுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தப்படும் என பொலிஸார் தமது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி, குற்றங்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்று சட்டத்தை நடைமுறைப்படுத்த பொதுப் போக்குவரத்து பஸ்களில் சிவில் உடை அணிந்த பொலிஸார் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின் வயர்களை அறுத்து விற்பனை செய்த மின்சார சபை ஊழியர் கம்பளையில் கைது



மின்சார சபைக்குட்பட்ட கொத்மலை வீதியிலும் கம்பளை டாட்ரி பிரதேசத்திலும் போடப்பட்டிருந்த அலுமினிய மின்சார வயர்களை அறுத்து மின்சார சபைக்கு 13 இலட்சம் ரூபா நட்டத்தை ஏற்படுத்திய நுவரெலியா மின்சார சபையின் பராமரிப்பு பிரிவு ஊழியரொருவரை கம்பளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கம்பளை மரியவத்தை பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய இவர் கம்பளை மின்சாரப் பராமரிப்புப் பிரிவில் பணிபுரிந்து வந்த நிலையில், இவ்வாறான ஒழுக்கமற்ற நடவடிக்கைகளுக்காக நுவரெலியா பராமரிப்பு பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரும் மற்றுமொருவரும் மின்சார சபை ஊழியர் பிரிவைச் சேர்ந்த சீருடை அணிந்து பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மின்சார சபையின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகச் சென்று இவ்வாறு மின்கம்பிகளை அறுத்துச் சென்றது தெரியவந்துள்ளது.

வீடுகளில் மின்சாரம் இருக்கும்போது, மின்சாரத் தூண்களில் ஏறி இவர்கள் அங்கு இழுக்கப்பட்டுள்ள மின் கம்பிகளை அறுத்து, மற்ற அலுமினிய கம்பிகளை வெட்டி விற்பனை செய்து வந்துள்ளனர். கம்பளை டாட்ரி பகுதியிலும் கொத்மலை வீதியிலும் மின்கம்பிகள் அறுந்து விழுந்த நிலையில் கம்பளை பராமரிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு இது தெரியவந்துள்ளது.

அப்பகுதியில் உள்ள சிசிடிவியை சோதனையிட்டபோது இந்தத் தொழிலாளி அடையாளம் காணப்பட்டதுடன், கம்பளை பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். இதனையடுத்து வெட்டப்பட்ட நிலையில் 6 இலட்சம் ரூபா பெறுமதியான கம்பியையும் கண்டெடுத்துள்ளனர்.

மற்றைய நபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கண்டுபிடிக்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர் 19 வருடங்களாக மின்சார சபையில் கடமையாற்றியவர் என்பதுடன் 38 வயதான இந்த நபர் இன்று (6) கம்பளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

கம்பளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவன்சவின் பணிப்புரையின் பேரில் கம்பளை தலைமையகப் பிரதான பொலிஸ் பரிசோதகர் லக்சிறி பெர்னாண்டோ மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜ.பி.ஜயந்த, எஸ்.ஜ. தசநாயக்க, 53793 ரூக்மன், 45203 துனுக்கர, 85139 சேவியர் மற்றும் 6714 நில்மினி அமித் உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட எழுவர் கைது

பழங்காலப் பொருட்களைப் பெறும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் 7 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். தெஹியோவிட்ட - அட்டுலுகம, மீவலகந்த பிரதேசத்தில் இடம் பெற்ற அகழ்வு நடவடிக்கை தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25 முதல் 56 வயதுக்கிடைப்பட்ட சீதுவ மற்றும் தெஹியோவிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர். சோதனையிடப்பட்ட இடத்தில் பூஜைப் பொருட்கள் உள்ளிட்ட அகழ்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹியோவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கண்டியில் மீன் வியாபாரி வெட்டிப் படுகொலை

## வத்தேகம அதலஹகொட பிரதேசத்தில் சம்பவம்

*எம்.ஏ.அமீனுல்லா*



கண்டி - வத்தேகம அதலஹகொட பிரதேசத்தில் மீன் வியாபாரியொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மீன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த வர்த்தகர் வீட்டின் முன்வைத்து படுகொலை செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தில் வந்த நால்வர் கடந்த வெள்ளிக்கிழமை (03) இரவு இக்கொலையை மேற்கொண்டுள்ளதாகவும் வர்த்தகரைக் கொல்வதற்கு முன்னர் வர்த்தகரை மிளகாய்ப் பொடியால் தாக்கியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வத்தேகம அமில மீன் கடையின் உரிமையாளரான சஞ்சீவ வசந்த குமார (39) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்ட சஞ்சீவ வசந்தகுமாரவுக்கு மற்றுமொரு மீன் வியாபாரியிடமிருந்து மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

50 இலட்சம் ரூபா பெறுமதியான ஒப்பந்தத்தின் பேரில் சஞ்சீவவை கொலைசெய்யப்போவதாக ஒரு மாதத்துக்கு முன்னர் தெல்தெனிய பொலிஸில் முறைப்பாடு செய்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

வத்தேகம பொலிஸில் முறைப்பாடு செய்தால் தனக்கு எதிரான தரப்பினருக்கு தகவல் கிடைக்குமென எண்ணியே சஞ்சீவ தெல்தெனிய பொலிஸில் முறைப்பாடு செய்ததாக உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

காலி தென் மாகாணத்தைச் சேர்ந்த குழுவொன்றினால் இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

படுகொலை செய்யப்பட்ட சஞ்சீவ குமாரவின் உறவினர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை வத்தேகம பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# சர்வதேச இரத்தினக்கல் - ஆபரண கண்காட்சியில் ஜனாதிபதி பங்கேற்பு





சர்வதேச "FACETS Sri Lanka - 2025" இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் (04) சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஆரம்பமானது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கூடங்களை பார்வையிட்டார்.

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபை (EDB) என்பன இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் FACETS Sri Lanka சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி இன்று (06) வரை நடைபெறவுள்ளது.

ஆசியாவின் முதன்மை இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS Sri Lanka இம்முறை 31ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பல நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த கண்காட்சியில் கலந்துகொண்டுள்ளனர்.

இலங்கைக்கு முதல் முறையாக வரும் உலகின் புகழ்பெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் இம்முறை நிகழ்வில் கலந்துகொண்டுள்ளதோடு, இரத்தினபுரி, எலஹெர, பேருவல, எஹெலியகொட, காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து உள்நாட்டு இரத்தினக்கல் கொள்வனவாளர்கள் பலரும் FACETS Sri Lanka 2025 கண்காட்சியில் பங்குபற்றியுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பல தரப்புடனான வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதே இந்த தொழில்துறை முன்னோடிகளின் பிரதான நோக்கமாகும். FACETS Sri Lanka 2025 கண்காட்சியின் அடிப்படையில் ஏற்றுமதி மூலம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை விடவும் அதிகமாக ஈட்டிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறையினர் ஆவலுடன் பங்கேற்கும் FACETS Sri Lanka 2025 கண்காட்சி, இலங்கையின் உயர் இரத்தினக்கல் மற்றும் ஆபரண பாரம்பரியம், பல்வகைத்தன்மை மற்றும் நிலைத்தன்மைக்கு சான்றாகும்.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க ஆகியோரும் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# சுதந்திர தின விழா ஏற்பாட்டுக் குழுவினரை சந்தித்தார் பிரதமர் ஹரிணி அமரசூரிய




நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 2025.02.04 அன்று இடம்பெறவுள்ள சுதந்திர தின விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

சுதந்திர தின விழா தொடர்பான ஏற்பாட்டு நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் முன்வைக்கப்படவுள்ள கலாசார அம்சங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப் பட்டன.

77ஆவது சுதந்திர தின விழா இவ்வருடம் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான கலாநிதி ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன, பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, குமார ஜயக்கொடி, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, செயலாளர்களான ஆலோக பண்டார, நாலக களுவெவ, எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# வட மாகாண ஆளுநரை சந்தித்தார் இந்தியத் துணைத் தூதுவர்




*பு.கஜிந்தன்*

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக் கும் இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய் முரளிக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு நேற்று முன்தினம் (04) காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இந்திய துணை தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் உடன் பங்கேற்றிருந்தார்.

ஆளுநர் மற்றும் துணைத்தூதுவர் இருவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்திய அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்பது தொடர்பில் துணைத்தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

# இந்திய ரோலரைக் கட்டுப்படுத்த முடியாவிடில் நெடுந்தீவை இந்தியாவுக்கு வழங்குங்கள்!

## இளம்பிறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் சத்தியாம்பிள்ளை தோமாஸ்



"நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய அத்துமீறிய ரோலர் படகுகளை தடுத்து நிறுத்துவதற்கு இயலாது விட்டால் எம்மை வேறொரு பிரதேசத்துக்கு மாற்றிவிட்டு நெடுந்தீவை இந்தியாவுக்கு வழங்கி விடுங்கள்" என நெடுந்தீவு இளம்பிறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும் சமாச பிரதிநிதியுமான சத்தியாம்பிள்ளை தோமாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நெடுந்தீவு கடற்பரப்பில் பல வருட காலமாக இந்தியா அத்துமீறிய இழுவைப் படகுகளினால் எமது மீனவர்கள் பாரிய இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 29ஆம் திகதியும் இந்தியாவின் அத்துமீறிய இழுவைப் படகுகளினால், எமது 30 மீனவர்களின் சுமார் நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான வலைகள் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன.

எமது மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல முடியாத அளவுக்கு இந்திய ரோலர்களினால் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் இந்திய ரோலர்களை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவில் பேச்சு வார்த்தை நடத்தினார். அது தோல்வியில் முடிவடைந்தது. கச்சதீவில் இருநாட்டு மீனவர்களையும் அழைத்து பேசினார் அதுவும் தோல்வியில் முடிவடைந்தது.

இவ்வாறு இந்திய மீனவர்களை கட்டுப்படுத் துவதற்கு மேற்கொண்ட அனைத்து பேச்சுவார்த் தைகளும் தோல்வியில் முடிவடைந்தால் நாம் என்ன செய்வது. ஆகவே நெடுந்தீவில் இருந்து கொண்டு எமது வாழ்வாதார தொழிலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் எம்மை வாழ்வதற்கு ஏற்ற ஒரு இடத்துக்கு மாற்றிவிட்டு இந்தியாவுக்கு நெடுந்தீவை ஒப்படையுங்கள் எங்களை வாழ விடுங்கள்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# 11 கிலோ தங்கத்துடன் மூவர் கைது



*ரஸீன் ரஸ்மின்*

கற்பிட்டி - பத்தலண்குண்டுவ கடற்பகுதியில் 11 கிலோ 300 கிராம் நிறையுடைய தங்கத்துடன் சந்தேக நபர்கள் மூவர் நேற்று முன்தினம் (04) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் 28 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 - 45 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்றும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி - பத்தலண்குண்டுவ கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான டிங்கி இயந்திரப் படகு ஒன்றினை கடற்படையினர் சோதனை செய்தனர்.

இதன்போதே, குறித்த இயந்திர படகில் தங்கம் கடத்தப்பட்டமை தெரியவந்துள்ளது. இதன்போது குறித்த தங்கத்தை பறிமுதல் செய்த கடற்படையினர், அந்த இயந்திரப் படகில் பயணித்த மூவரை சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், குறித்த தங்கம் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் இயந்திரப் படகும் கடற்படையினரால் கைப்பற் றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர்.

# குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினம் அனுஷ்டிப்பு!



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவுதினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று (05) காலை அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# 50 மில்லியன் ரூபா பெறுமதியான பூச்சிக்கொல்லிகளுடன் நால்வர் கைது




வேலணை - துறையூர் பகுதியில் வைத்து பெருமளவான விவசாய பூச்சி கொல்லி மருந்து போத்தல்களுடன் சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட குறித்த பூச்சிகொல்லி போத்தல்களை வாகனம் ஒன்றில் எடுத்துச் செல்ல முற்பட்டவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பூச்சிக்கொல்லிகளின் ஒட்டுமொத்த விலை 50 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் எலிக்காய்ச்சலால் மேலும் இரு மரணங்கள் பதிவு!

## யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு



*பு.கஜிந்தன்*

எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலும் இரு மரணங்கள் சம்பவித்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்திலே எலிக்காய்ச்சல் நோய் காரணமாக பாதிக்கப்பட்ட 202 நோயாளர் களின் தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றன. இவற்றிலே 94 பேருக்கு இந்த எலிக்காய்ச்சல் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 10 நோயாளர்கள் எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின் றனர். இவர்களில் ஏழு பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் மூன்று பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இவ்வாறு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் மூன்று பேர் எலிக்காய்ச்சல் நோய் என்ற சந்தேகத்துடன் புதிதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி 2ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு இறப்புகள் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக ஏற்பட்டுள்ளன. இதில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். மற்றவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக இதுவரை எட்டு இறப்புகள் பதிவாகியுள்ளன.

கடந்த 2ஆம் திகதி ஏற்பட்ட இறப்பில், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள துன்னாலை கிராமத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லவில்லை.

மருந்தகங்களிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் நோய் முற்றிய நிலையில் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

அத்துடன் நாங்கள் அவரது பகுதியில் வழங்கிய தடுப்பு மருந்தை இவர் துரதிர்ஷ்டவசமாக பெற்றுக் கொள்ளவில்லை. விவசாயிகள், கடல் நீரில் மீன் பிடிக்க செல்பவர்கள் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அந்த தடுப்பு மருந்தை, உங்களது சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு சென்று பெற்றுக் கொள்ளுங்கள்.

பெரும்பாலான இறப்புக்கள் தாமதமாக சிகிச்சைக்கு வந்த காரணத்தினாலேயே சம்பவித்துள்ளன. பின்னர் நாங்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வுக்கு அமைவாக மக்கள் காய்ச்சல் ஏற்பட்டபோது உடனடியாக சிகிச்சையை பெற்றுக் கொண்ட நிலையில் அவர்களது உயிரை காப்பாற்றக்ளகூடியவாறு இருந்தது.

இந்த காலப்பகுதியில் டெங்கு நோய் மற்றும் எலிக்காய்ச்சலின் தாக்கம் காணப்படுகின்றது. எனவே ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் தாமதிக்காமல் அருகில் உள்ள அரச வைத்திய சாலைக்கு செல்லுங்கள்.

மேலும் எலிக் காய்ச்சலானது கால்நடைகளில் இருந்து பரவுகின்றதா என்பது தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கொண் டிருக்கின்றன. அநேகமாக அதன் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில் வெளிவரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# பாடசாலையில் நிதி சேகரிப்பு விவகாரம்; தேசிய கணக்காய்வு நிறுவனம் நடவடிக்கை

*பு.கஜிந்தன்*

முல்லைத்தீவு பாடசாலை ஒன்றில் சில ஆசிரியர்கள் இணைந்து பாடசாலை நிகழ்வு ஒன்றுக்காக தமது வங்கிக் கணக்குகளில் நிதி சேகரித்த விடயம் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகம் கேள்வி எழுப்பியுள் ளது.

முறைப்பாட்டாளர் முன்வைத்த ஆதாரங்க ளுடன், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக்கு அமைவாக அதன் தற்போதைய நிலை மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வினவப்பட்டதற்கு அமைவாகவே குறித்த பதிலில் வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு கணக்காய்வு சட்டம் 19 - பந்தி 9 இன்படி, கணக்கீட்டு படிமுறையின் இடைநிலை எனவும் குறித்த திணைக்களத்தில் இருந்து கிடைக்கும் பதில் எமது ஐயங்களை உறுதிசெய்யும் பட்சத்தில் எமது ஆண்டறிக் கையில் பதியப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக் கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தமிழ்த் தேசியம் தோற்குமானால் இலங்கை தமிழர்கள் துடைத்தெறியப்படுவார்கள்

## தர்மலிங்கம் சுரேஸ் தெரிவிப்பு





**(வீரமுனை செய்தியாளர்)**

''தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கு இந்தியா துணைநிற்குமானால் வடக்கு, கிழக்கு தமிழர்கள் இந்தியாவுக்கான ஆதரவை நூறு வீதம் வழங்குவார்கள். அதேவேளை, மக்கள் மிகத் தெளிவாக நிற்க வேண்டும். தமிழ்த் தேசியம் தோற்குமாக இருந்தால் இந்த இலங்கைத் தீவில் தமிழர்கள் அடிமைகள் அல்லது தமிழர்கள் துடைத்தெறியப்படுவார்கள்''- என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை(05) அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு பகுதியில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

ஓய்வு நிலை அதிபர் சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் குககுமார் உட்பட கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அமைப்பாளரால் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன் கட்சி உறுப்பினர்களினாலும் பொதுமக்களினாலும் மலரஞ்சலி செலுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திக்காக ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவுகள் என்னும் தலைப்பிலும் சமகால அரசியல் நிலைமைகளும் தமிழ்த் தேசிய அரசியலும் என்னும் தலைப்பில் அமைப்பாளராலும் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது உரையாற்றிய தர்மலிங்கம் சுரேஸ், மாமனிதர் குமார் பொன்னம்பலம் சட்டத்தில் தேர்ச்சிபெற்ற ஒருவர். பூகோள அரசியல் போட்டியில் எங்களுடைய தமிழ் மக்கள் சிக்குண்டு சிங்கள தேசத்தினால் இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலகட்டத்தில் எமது மக்களுக்காக இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடிக்கொண்டிருந்த வேளையில் எங்களுடைய அந்தப் போராட்டம் என்பது ஒரு பயங்கரவாதப் போராட்டமென உலகத்துக்கு இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்ற ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் அந்த ஆட்சியாளர்களும் ஒரு பிழையான பிம்பத்தை இந்த சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறி வந்திருந்தனர்.

அந்த நிலையில், குமார் பொன்னம்பலம் இலங்கையின் தலைநகர் கொழும்பில் இருந்துகொண்டு தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நியாயமான ஒரு போராட்டம். எங்களுடைய தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்த இளைஞர்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தியிருக்கின்றார்கள் என்கின்ற நியாயப்பாட்டை உலகத்துக்கு எடுத்துக் கூறினார். அக்காலகட்டத்திலேயே சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு முன்னால் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தமை யினால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இன்று இந்த நாட்டை மையப்படுத்தி இடம் பெற்றுக்கொண்டிருக்கின்ற தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் என்பது தணியவில்லை. ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டாலும் எங்களுக்கான இனத்துக்கான விடுதலைப் போராட்டம் இன்னமும் மௌனிக்கவில்லை. இதனை எமது மக்கள் அனைவரும் நன்கு அறிய வேண்டும்.

இலங்கை இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்கான தீர்வை இந்தியா செய்யுமாக இருந்தால் 100வீதம் நாங்கள் இந்தியாவுடன் இணைந்து கொள்வோம். இந்தியாவை விட்டு வேறோர் இடத்துக்கும் நாங்கள் செல்ல மாட்டோம். வடக்கு, கிழக்கில் சீனா உட்பட எந்த நாட்டுக்கும் இடமில்லை. இந்தியாவுக்கு மாத்திரம்தான் தமிழர்கள் அனுமதிப்பார்கள். ஏனென்றால், அவர்கள் தான் இந்த நாட்டைப் பாதுகாக்கக் கூடிய அத்தனை வல்லமையும் கொண்டிருக்கக்கூடிய ஒரு சக்தி.

அவர்கள் எமது தொப்புள் கொடி உறவுகள். ஆகவே, இந்தியா இந்த விடயங்களைக் கவனமாகக் கையாண்டு எமது மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டும். ஒரு நீண்ட காலம் புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினை இந்தியாவின் கையில் இந்த நாடு சிக்கி 4.5மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றிருக்கின்றது. இந்த நாடு இந்தியாவுக்கு கடமைப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்தியாவின் கைக்குள் தான் இலங்கை இருக்கின்றது. இந்தியா மிக இலகுவாக இந்த நாட்டை நாட்டின் தலைவரை இலகுவாகக் கொண்டு வரலாம். இலகுவாக வெளியில் தூக்கி எறியலாம். அந்த அடிப்படையில் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியா முன்நின்று செயற்பட வேண்டும். அதற்காக இங்கிருக்கின்ற அனைத்து தமிழ் தலைவர்களும் இந்த விடயத்தை ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும்'' - என்றார்.

# கிழக்கின் முதலாவது பொலிஸ் விரிவுரை மண்டபம் திறந்துவைப்பு





**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

சுமார் ஒரு கோடி 80இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதலாவது பொலிஸ் விரிவுரை மண்டபம் நேற்று ஞாயிற்றுக்கிழமை(05) காலை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கலாநிதி அஜித் ரோஹணவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பணிமனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டிட திறப்பு விழாவில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளின் அத்தியட்சகர்கள், உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பி. வாசுதேவன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர் உட்பட அதிதிகள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

நீண்டகாலத் தேவையாக இருந்த பொலிஸ் விரிவுரை மண்டபம் நவீன வசதிகளுடன் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு நிர்மாணிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட கட்டிட நிர்மாணத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





*காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவை பூஜை நிகழ்வுகள் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின. காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலம் அதிகாலை முதல் இடம்பெற்று வருகின்றது. இதன்போது சிவபெருமான் வீதியுலா நடைபெற்று பூஜை நிகழ்வுகள் இடம்பெறுவதைக் காணலாம். (காரைதீவு செய்தியாளர்)*

# கிண்ணியாவில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பம்




**(சீனக்குடா செய்தியாளர்)**

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், கிண்ணியா பிரதேசத்தைச் சுத்தப்படுத்தும் பல்வேறு நிகழ்வுகள் சனிக்கிழமை(04) இடம் பெற்றன.

'ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ், டெங்கு நுளம்பு சம்பந்தமாக விழிப்புணர்வு ஊர்வலம் கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்து, பிரதான வீதி ஊடாகச் சென்று திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள சுகாதார ஊழியர் விடுதியைச் சென்றடைந்தது.

இதன் பின்னர், சுகாதார ஊழியர்கள் விடுதி அமைந்துள்ள வளாகத்தைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். கிண்ணியா தள வைத்தியசாலை, கிண்ணியா நகர சபை மற்றும் கிண்ணியா சுகாதார வைத்திய அலுவலகம் ஆகியன இணைந்து, இந்தக் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.அஜித், கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம்.எம்.அனீஸ், கிண்ணியா வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் ஹஸ்புல்லா ஹில்மி, பதில் சட்ட வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.ஜிப்ரி, சுகாதார ஊழியர்கள் மற்றும் வைத்திய ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




*திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ இரத்தினசிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விநாயகர் விரத பெருங்கதை உற்சவத்தை முன்னிட்டு சனிக்கிழமை (04) மாலை கஜமுகாசூரசம்ஹாரம் இடம்பெற்றது. இதன்போது விநாயகப் பெருமான் தீபாராதனைகளுடன் கஜமுகனை வதம்செய்யப் புறப்படுவதையும் சூரசம்ஹார நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (பதுர்தீன் சிஹானா)*

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

**(பாறுக் ஷிஹான்)**

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை தாக்கிய சந்தேக நபர்கள் நால்வரை நாளை 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை(03) நான்கு சந்தேக நபர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி தெசீபா ரஜீவன் உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் சம்மாந்துறை பொலிஸார் இறக்காமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். அத்துடன் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்திருந்ததுடன் செய்தியாளரை தாக்கிய குற்றச்சாட்டின் அடிப்படையில் மேலும் மூவர் அன்றைய தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தனர். இதற்கமைய, குறித்த சம்பவத்துடன் 09 சந்தேக நபர்கள் சம்மாந்துறை மற்றும் இறக்காமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இதில் ஏலவே சம்மாந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் ஒரு சந்தேக நபரும் இறக்காமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 03 சந்தேக நபர்களும் குறித்த சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். ஏனைய 05 சந்தேக நபர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் செய்தியாளர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்படும் 04 சந்தேக நபர்களும் அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை(03) ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் நால்வரையும் எதிர்வரும் 07 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




*மட்டக்களப்பு போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருப்பழுகாமம் கிராமத்தில் அமைந்துள்ள வெள்ளிமலை பண்பாட்டு மண்டபம் திறந்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை(03) வெள்ளிமலை பண்பாட்டு மண்டபத் தலைவர் ஆ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை(வெள்ளிமலை) மா.நடராசா, கலாசார உத்தியோகஸ்தர்கள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (மட்டக்களப்பு செய்தியாளர்)*

# கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

**(வீரமுனை செய்தியாளர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பகுதியில் நேற்றுக்காலை குளிக்கும்போது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார்.

தும்பங்கேணி கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான தங்கராசா பரமானந்தம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்நிலையில் வீழ்ந்து உயிரிழந்த குழந்தையின் மரண வீட்டுக்குச் சென்றுவிட்டு வந்து கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தபோதே கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். உடனடியாக பிரதேசவாசிகளின் உதவியுடன் அவர் பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




*மட்டக்களப்பு வாகரை காயான்கேணி கடற்கரையில் சனிக்கிழமையன்று (04) காலை வேளை இரும்பிலான உருளை வடிவ தாங்கி ஒன்று கரையொதுங்கியுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர். கடலில் மிதந்து வந்த குறித்த தாங்கியை பிரதேச மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து கரைசேர்த்துள்ளனர். இது ஆழ்கடலில் தரித்து நிற்கும் கம்பல்களின் உதிரிப்பாகமாகவோ அல்லது அவற்றின் ஏனைய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் பொருளாகவோ இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)*

# ரோஹிங்யா அகதிகளை மீள மியன்மாருக்கு அனுப்பாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா வேண்டுகோள்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா அகதிகளை மீண்டும் மியன்மார் நாட்டுக்கு திருப்பி அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இது மனிதாபிமானத்தை விரும்புபவர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பான நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்றுக்கொள்ளும் நோக்கமாகவே இவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மியன்மாரில் இருந்து நாட்டை வந்தடைந்த அகதிகள் குற்றவாளிகளோ சந்தேக நபர்களோ அல்ல என்பதால் அவர்களைத் தடுத்து வைப்பது முற்றிலும் தவறு எனச் சுட்டிக்காட்டியிருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ, ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரும் மௌனம் காப்பது கவலையளிக்கிறது. அகதிகள் அல்லது புகலிடக் கோரிக்கையாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்ளக்கூடிய அபாயமுள்ள நாட்டுக்கு அவர்களை வலுகட்டாயமாகத் திருப்பி அனுப்பாதிருத்தல் எனும் சர்வதேச அடிப்படைச் சட்டத்துக்கு முரணான விதத்தில் மியன்மார் அகதிகளை மீண்டும் அந்நாட்டுக்குத் திருப்பியனுப்புவது ஏற்புடையதல்ல என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை இங்கு கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இது விடயத்தில் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா அகதிகளை நாடு கடத்த வேண்டாம் என கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஜனாதிபதியிடம் கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அறிகிறோம். அதுபோன்று முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களான ரஊப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ஏ.எல்.எம். அதாஉல்லா, அசாத் சாலி போன்ற கட்சித் தலைவர்களும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மனிதாபிமான விரும்பிகளும் முஸ்லிம்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதனைக் கவனத்திற்கொண்டு மனிதாபிமானமிக்க அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் அந்த அகதிகளை மீள மியன்மார் நாட்டுக்கு அனுப்பாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

### நீதிமன்றப் பிணையில் எடுத்துத் தருவதாக

# ரூ. 60ஆயிரம் இலஞ்சம் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் இடைக்காலப் பணிநீக்கம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நடைபெற்ற கொலை தொடர்பான சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றப் பிணையில் எடுத்துத்தருவதாகக்கூறி 60 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீதவானின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்தவரும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவரும் பொலிஸ் கான்ஸ்டபிளுமான ஒருவர் சனிக்கிழமை (04) இடைக்காலப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

மாவட்டத்திலுள்ள நீதவான் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வெல்லாவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 03 பேரையும் நீதிமன்றப் பிணையில் எடுத்துத் தருவதாக தலா ஒருவரிடம் 20 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயிரம் ரூபாவை கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி இலஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் அவர்களைப் பிணையில் எடுத்துவிட்டதையடுத்து பணத்தை இலஞ்சமாகக் கொடுத்தவர் இது தொடர்பாக நீதவானின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து நீதவான் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யுமாறு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கட்டளை பிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த கான்ஸ்டபிளை அங்கிருந்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றியதுடன் இது தொடர்பாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பணித்திருந்தார். இதன்போது குறித்த பணத்தை இலஞ்சமாகப் பெற்றதற்கான ஆதாரத்தை புலனாய்வுப் பிரிவினர் தேடி விசாரணை செய்து வரும் நிலையில், பொலிஸ் கான்ஸ்டபிள் இலஞ்சம் வாங்கியவரின் வங்கிக் கணக்குக்கு இலஞ்சமாக வாங்கிய பணத்தை வைப்பிலிட்டுள்ளார்.

இதனடிப்படையில் இலஞ்சம் வாங்கியுள்ளார் என்பதை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் உறுதிப்படுத்தி பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய குறித்த கான்ஸ்டபிளை பணியிலிருந்து தற்காலிகமாக நீக்குமாறு அறிவுறுத்தியதற்கமைய உடனடியாக அவர் இடைக்காலப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சாரதி கைது

(கனகராசா சரவணன்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மட்டக்களப்பு வீட்டின் முன்னால் கடந்த 2021இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக சி.ஐ.டியினரால் கொலைக் குற்றத்தின் பேரில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அமைச்சரின் வாகனச்சாரதியொருவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் வெள்ளிக்கிழமை(03) உத்தரவிட்டார்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் அமைச்சரின் மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 28 வயதுடைய பாலேந்திரன் என்ற இளைஞனொருவர் உயிரிழந்துள்ளதையடுத்து மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகிய பிரபல சட்டத்தரணிகளான ந.கமலதாஸ், வி.சுதர்ஷன் ஆகியோர் இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை எனத் தொடர்ந்து ஆட்சேபித்து வந்ததுடன் உயிரிழந்தவரின் பெற்றோரும் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு மாற்றுமாறு சட்டத்தரணி ஊடாகக் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், குறித்த விசாரணையை கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வந்த நிலையில், அமைச்சரின் வாகனச் சாரதியான தம்பான் என்றழைக்கப்படும் தனுசன் என்பவரை சந்தேகத்தின் பேரில் கொலைக் குற்றத்தின் அடிப்படையில் வெளிநாடு செல்லவிருந்த நிலையில் வியாழக்கிழமை (2) கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை சி.ஐ.டியினர் முன்நகர்வு பத்திரம் தாக்கல் செய்து ஆஜர்படுத்தியதையடுத்து வழக்கு விசாரணையை எடுத்துக் கொண்ட நீதவான் அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட அமைச்சரின் மெய்ப்பாதுபாப்பு உத்தியோகத்தர் ஒரு வருடத்தின் பின்னர் நீதிமன்றப் பிணையில் வெளிவந்துள்ளதுடன் 03 வருடங்களுக்குப் பின்னர் சந்தேகத்தில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தலில் சம்மாந்துறைக்கு சிறந்த தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய வேண்டும்

## சட்டத்தரணி ஹாதி இஸ்மாயில் வேண்டுகோள்








(பெரியநீலாவணை மேலதிக செய்தியாளர்)

சம்மாந்துறைப் பிரதேசத்தில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமொன்று கடந்த மூன்று நான்கு தசாப்தங்களாக வெற்றிடமாகக் காணப்படுகின்றது. இங்கு ஆளுமைமிக்க ஓர் அரசியல் தலைமைத்துவம் இல்லாத காரணத்தால் வாக்குகள் பல்வேறு பக்கமும் பிரிந்து செல்கின்றன. அதனால் எந்தப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது. எனவே, ஆளுமைமிக்க அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு பொருத்தமானவரை உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் தெரிவு செய்ய வேண்டுமென சட்டத்தரணி ஹாதி இஸ்மாயில் தெரிவித்தார்.

பொருளாதாரம் மற்றும் கல்வியில் பின்தங்கிய மாணவர்களை மேம்படுத்தல் தொடர்பாகவும் அரசியல் பிரதிநிதித்துவமொன்றின் தேவைக்கான கலந்துரையாடல் ஒன்று சம்மாந்துறை நாபீர் பவுண்டேஷன் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(04) இடம்பெற்றது. இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்த அரசியல் தலைமைத்துவத்தை நாங்கள் இன்று அடையாளங் கண்டிருக்கின்றோம். கடந்த சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் சமூக சிந்தனையாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீரை நாங்கள் ஒரு சிறந்த தலைமைத்துவமாக இனங்கண்டிருக்கின்றோம். எனவே, அவருடைய கரங்களைப் பலப்படுத்தி அவரை ஓர் அரசியல் அதிகாரத்தில் அமர்த்த வேண்டும். இவர் ஒரு சமூக சிந்தனையுள்ள சிறந்த மனிதர். இவரை நாங்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பினால் நிச்சயமாக சம்மாந்துறை பிரதேசம் அரசியல் எழுச்சி பெற்று சமூக அபிவிருத்தியில் ஒரு சிறந்த சமூகமாக உயர்வடையும் என்பது நிச்சயம்.

மேலும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே போட்டியிடுவதற்கேற்ற வகையிலே நாமனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் அரசியல் கட்டமைப்பை உருவாக்கி இப்பிரதேச சபைகளை நாங்கள் கைப்பற்றக்கூடிய சக்தியாக மாற வேண்டும். அதேபோல, எதிர்காலத்திலே ஒரு கட்சியாக உருவாக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் மட்டுமல்லாமல், ஏனைய மாவட்டங்களுக்கும் எங்களது கட்சியைப் பரவலாக்க வேண்டும். அதுவொரு மாபெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான துல்கர் நயீம் (துல்சான்) கருத்துத் தெரிவிக்கையில்,

''அம்பாறை மாவட்டத்தில் 5,000 வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டுமென்ற அடிப்படை எண்ணப்பாட்டுடன் நாபீர் பவுண்டேஷன் செயற்படுகின்றது. இவ்வாறான விடயங்களை விரைவாக முன்னெடுப்பதற்கு அரசியல் அதிகாரம் அவசியமாகும். அத்துடன், தொழிற்பேட்டைகளை அமைத்து இதர வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியிலும் நாபீர் பவுண்டேஷன் ஈடுபடுகின்றது. இது தவிர, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டு வீட்டுத்திட்டங்களை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையிலும் கவனஞ்செலுத்தி வருகின்றது. இதற்கெல்லாம் அரசியல் அதிகாரமானது இன்றியமையாதது. எனவே, சிறந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்த நாம் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்''- என்றார்.

இதன்போது அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பிரமுகர்களைக் கொண்ட உயர்மட்ட ஆலோசனைச்சபையொன்றும் அமைக்கப்பட்டது.

இதன்போது அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளையும் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாதர் சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்களும் பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மாதர் சங்கங்களின் தலைவிகள், செயலாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# ஐஸ், ஹெரோயின் போதைப்பொருளுடன் நால்வர் கைது

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞனிடமிருந்து 1900 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் வியாழக்கிழமை(02) இரவு கைப்பற்றப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதான சந்தேக நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 1,900 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டிருந்தது.

மேலும், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடிய இருவரை சம்மாந்துறை பொலிஸார் வியாழக்கிழமை(02) மாலை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கைதான 27 மற்றும் 40 வயதுடைய இரு சந்தேக நபர்களும் கருவாட்டுக்கல், உடங்கா பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணையில் வெளியாகியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசமிருந்து 4200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டிருந்தது.

சந்தேக நபர்களை சான்றுப்பொருட்களுடன் சட்டநடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன், இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் 25 கிராம் 440 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் சனிக்கிழமை(04) இரவு கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கல்முனை விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது குறித்த இறக்காமம் பகுதியைச் சேர்ந்த 21 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 25 கிராம் 440 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண பொங்கல் விழா

## பனங்காடு பாசுபதேசுவரர் ஆலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி நடத்த ஏற்பாடு



(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

கிழக்கு மாகாண பொங்கல் விழா தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை(03) நடைபெற்றது.

கிழக்கு மாகாண கலாசாரப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகமும் இணைந்து இவ்வருடம் மாகாண பொங்கல் விழாவை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பொங்கல் விழா தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண கலாசாரப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.நவனீதன் கலந்து கொண்டதுடன் ஆலையடிவேம்பு உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் மற்றும் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் உள்ளிட்ட பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், ஆலயங்கள், பொது அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள் என பல்வேறு அமைப்பினதும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மாகாண பொங்கல் விழா பனங்காடு பாசுபதேசுவரர் ஆலயத்தை மையமாகக் கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு, பாரம்பரிய முறையிலான பொங்கல் மற்றும் பல்லேறு கலை, கலாசார நிகழ்வுகளுடன் பொங்கல் விழா இடம்பெறுமெனவும் குறிப்பிடப்பட்டதுடன் பொறுப்புகள்யாவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# கடுக்காமுனையில் சட்டவிரோதமாக பறவைகளை கொலை செய்தோர் கைது

(வாழைச்சேனை செய்தியாளர்)

ஜனாதிபதியின் கிளீன் ஸ்ரீலங்கா வேண்டுகோளின் கீழ் சட்ட நிர்வாக நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக கடுக்காமுனைப் பகுதியில் சட்டவிரோதமாக பறவைகளைக் கொலை செய்த சந்தேக நபர்கள் கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

காலநிலை மாற்றத்தால் இடம்பெயர்ந்து வரும் வெளிநாட்டு அரிய வகை சுற்றுலாப் பறவைகள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் தமது வாழ்க்கையை கழிப்பது வழக்கம். இவ்வாறு இடம்பெயர்ந்து வரும் பறவைகளை சட்டவிரோதமாகக் கொலை செய்து வியாபாரப்படுத்தும் பல சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்வது நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், கொக்கடிச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பயணித்த வாகனங்கள் பரிசோதிக்கப்பட்ட நிலையில், சந்தேகத்துக்கிடமான கார் ஒன்றினுள் தடை செய்யப்பட்ட துப்பாக்கிகளும் கொலை செய்யப்பட்ட பறவைகளும் மீட்கப்பட்டன. இந்நிலையில், பொலிஸார் சந்தேகநபர்களை உடனடியாகக் கைதுசெய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# நீரோடையில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள போரதீவுப்பற்று பகுதியில் உள்ள நீரோடையில் விழுந்து ஒன்றரை வயது ஆண்குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (04) இடம்பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

போரதீவுப்பற்று இளைஞர் விவசாயத்திட்டத்தைச் சேர்ந்த ஒன்றரை வயதுடைய முருகேசு விகான் என்னும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நீர் நிலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் உள்ள குழந்தை சம்பவதினம் காலையில் வீட்டிலிருந்து தத்திதத்தி நடந்து வெளியேறி வீட்டிற்கு அருகிலுள்ள நீரோடைப் பகுதிக்கு வந்து விளையாடிக் கொண்டிருந்தபோது வாய்க்கால் நீருக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கியுள்ளது.


இதனையடுத்து குழந்தையை மீட்டு பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துள்ளதென வைத்தியர்கள் தெரிவித்ததுடன் குழந்தையை பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லா வெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## இலங்கையின் முதல் ட்ரோன் நிகழ்ச்சியை நடத்தி 2025 ஆம் ஆண்டை வரவேற்ற டயலொக்



இலங்கையின் #1 இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, 2025 ஆம் ஆண்டின் வரவேற்புக்கான நாட்டின் முதல் ட்ரோன் கவுண்ட்டவுன் நிகழ்ச்சியை நடத்தி சாதனை படைத்துள்ளது. ITNஇன் 31ஆம் இரவுத் திருவிழாவுடன் இணைந்து கொழும்பின் காலி முகத்திடல் (Galle Face Green) பகுதியில் நட ந்த இந்த கண்கொள்ளாக் காட்சி 400 ட்ரோன்களால் கொழும்பு வானத்தை ஒளியூட்டியதுடன் 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ளவர்களுக்கும் காட்சியளிக்கப்பட்டது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை 1,50,000 க்கும் மேற்பட்ட நேரடி பார்வையாளர்கள் கண்டு மகிழ, 1.2 கோடி இலங்கையர்களையும் ஈர்த்தது. இது டயலொக்கின் 'எதிர்காலம் இன்றே' என்ற வாக்குறுதிக்கேற்ப நவீன அனுபவங்களை வழங்கும் பங்களிப்பை வெளிப்படுத்தியது. நிகழ்வு பார்வையாளர்களை மெய்சிலிர்க்கச் செய்ததுடன், ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களில் தன்னியக்கமாக நூற்றுக்கணக்கான காணொளி மற்றும் தகவல் பதிவுகளை உருவாக்கவும் வழிவகுத்தது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழு முதன்மை சந்தைப்படுத்தல் அதிகாரி லசந்த தேவரப்பெரும கூறுகையில், ''இலங்கையர்களுக்காக எப்போதும் புதுமைகளைக் கொண்டுவர முயற்சி செய்யும் டயலொக், 31ஆம் இரவு டிரோன் நிகழ்ச்சியின் மூலம், அசாதாரண மற்றும் எதிர்காலத்தை நோக்கிய அனுபவங்களை வழங்குவதில் முன்னிலை வகிக்கிறது. 2025 ஆம் ஆண்டை வரவேற்கும் தருணத்தில் மக்களிடையே ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதே எங்கள் நோக்கம்" - என்று கூறினார்.

இந்த ட்ரோன் நிகழ்ச்சி, தொழில்நுட்பத்தின் அதிசயமாகும். இது சரியான பொறியியல் துல்லியத்தையும் சாகசமான கலை நுணுக்கத்தையும் இணைத்து டயலொக் நிறுவனத்தின் டிஜிட்டல் புதுமை மற்றும் பொழுதுபோக்குத் துறைகளில் முன்னோடித்தன்மையை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சியாக அமைந்தது. நிறுவனங்களுக்கு ஒரு முன்னோடியாகவும் இலங்கையர்களின் வாழ்வையும் தொழில்களையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் உயர்தர தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான Dialogஇன் அர்ப்பணிப்பு இந்த மறக்கமுடியாத நிகழ்வை சாத்தியமாக்கியது.

இந்த நிகழ்ச்சி, எல்லைகளை மீறி முன்னேறிக்கொண்டிருக்கும் டயலொக்கின் முன்னோடித் தன்மையையும் புதுமைமிக்க முயற்சிகள் மூலம் இலங்கை எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க அதன் உறுதிப்பாட்டையும் வலியுறுத்தியது.

## 2025ஆம் ஆண்டை சிறப்பாக வரவேற்ற மக்கள் வங்கி





பிறந்துள்ள புத்தாண்டை வரவேற்கும் வைபவமொன்று அண்மையில் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளதுடன் தூய்மையான இலங்கைக்கான (Clean Sri Lanka) உறுதிமொழியுடன் வங்கிப் பணியாளர்கள் தமது கடமைகளை ஆரம்பித்தனர்.

வைபவத்தில் கலந்துகொண்டோர் மத்தியில் மக்கள் வங்கியின் தலைவர் பேராசிரியர் நாரத பெர்னாண்டோ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன. செத் பிரித் பாராயணம் மற்றும் சர்வமத ஆசி வழிபாட்டு நிகழ்வுகளும் இத்தினத்தில் இடம்பெற்றன.


தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நிறுவன மற்றும் முகாமைத்துவ உயரதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சமய ஸ்தாபனப் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து அணி அங்கத்தவர்களும் பங்குபற்றினர். இதற்கிணையாக நாடெங்கிலுமுள்ள கிளைகளிலும் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் தூய்மையான இலங்கைக்கான உறுதிமொழியை பணியாளர்கள் அனைவரும் உறுதிப்படுத்தினர்.

1961ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி, இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கிகளில் ஒன்றாகத் திகழ்வதுடன், 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் நாட்டின் மிகப் பாரிய வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ளது. 750 கிளைகள் மற்றும் சேவை மையங்களுடன் நாட்டின் மிகப் பாரிய சேவை வலையமைப்பையும் கொண்டுள்ள



இவ்வங்கி, டிஜிட்டல் வங்கிச்சேவையில் மாற்றுக்கருத்துக்கு இடமின்றி முன்னிலை வகிப்பதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றது.

## நடமாடும் Hair Play Studio வசதியை அறிமுகப்படுத்தும் குமாரிகா






Hemas Consumer Brands நிறுவனத்தின் இலங்கையின் முன்னணி கூந்தல் பராமரிப்பு வர்த்தகநாமமான குமாரிகா, Hair Play Studio எனும் தனது நடமாடும் சலூன் வாகனம் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட கூந்தல் பராமரிப்பு அனுபவங்களை நேரடியாகக் கொண்டு வரும் ஒரு முயற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது. குமாரிகாவின் புதிய ஷாம்பு மற்றும் கண்டிஷனரின் பலன்களை அனுபவிப்பதற்கும் அனைத்து இலங்கையர்களின் கூந்தல் வகைகளுக்கும் பொருந்தும் வகையிலும் மிகுந்த கவனத்துடன் இந்த 'Hair Play' திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரத்தியேக அனுபவமானது வாடிக்கையாளர்கள் தமது கூந்தல் பராமரிப்பு தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் குதூகலமான அமர்வுகளைக் கொண்டதாக அமைகிறது. குமாரிகா Hair Play Studio அனுபவமானது தனிப்பயனாக்கப்பட்ட கூந்தல் பகுப்பாய்வுடன் ஆரம்பமாகிறது. இதில் ஒரு தொழில்முறை பகுப்பாய்வாளர் வாடிக்கையாளரின் கூந்தலை பகுப்பாய்வு செய்து அவர்களின் கூந்தல் பிரச்சினைக்கு மிகவும் பொருத்தமான குமாரிகா தயாரிப்பைப் பரிந்துரைக்கிறார். அதன் பின்னர், பரிந்துரைக்கப்பட்ட ஷாம்பு மற்றும் கண்டிஷனரைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் ஹேயர் வோஷ் அனுபவத்தைப் பெறுவார். இது அத்தயாரிப்பின் முதன் முறை பெறும் உணர்வை அவர்களுக்கு வழங்குகிறது.

Hair Play Studio அனுபவத்துக்கு விசேட செயற்பாட்டை இணைக்கும் வகையில் தங்கள் பெயர் பொறிக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட 80ml அல்லது 180ml குமாரிகா ஷாம்புவை கொள்வனவு செய்யும் வாய்ப்பையும் வாடிக்கையாளர்கள் பெறுகின்றனர். இந்த முயற்சியானது நுகர்வோரால் பெரிதும் பாராட்டுக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது.

## Emerald இன் புதிய தோற்றம்: ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற பல்வகை ஆடவர் ஆடைகள்





EMERALD

இலங்கையின் முதன்மையான ஆடவருக்கான ஆடை வர்த்தக நாமமான Emerald International, 'Re-Imagine Emerald' எனும் தனது வர்த்தகநாம மீள் பெயரிடல் மூலம் தமது பாரம்பரியத்தை மீள்வரையறை செய்துள்ளது. அந்த வகையில், நிறுவனம் தமது வர்த்தகநாமத்துக்கு ஒரு நவீன புதிய இலச்சினையை (Logo) வெளியிட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு ஆடவரும் ஒவ்வொரு கணத்துக்குமேற்ற ஸ்டைலை வழங்கும் ஒரு வர்த்தகநாமமாக Emerald தன்னை நிலைநிறுத்துகிறது.

மிக நீண்டகாலமாக போர்மல்வெயார்களுக்கான (சம்பிரதாய/அலுவலக) ஒரு பெயராக Emerald இருந்து வருகின்ற போதிலும், வர்த்தகநாமத்தின் வெளியீடுகளை மீளமைக்கவேண்டிய நேரம் இதுவாகுமென அறிவித்துள்ளது. Emerald என்பது இனிமேலும் ஒரு போர்மல்வெயராகவன்றி, இன்றைய ஆடவர்கள் அனைவரினதும் பல்வேறு தேவைகளுக்கேற்றவாறான பல்துறை ஆடவர் ஆடைகளாக மாறுகின்றது.

Emerald International பிரதம வணிக அதிகாரியான அஹ்மத் இக்ரம் இது பற்றித் தெரிவிக்கையில், "Emerald வர்த்தகநாம மீள் பெயரிடல் நிகழ்வானது, வெறுமனே அதற்கு ஒரு புதிய தோற்றத்தை வழங்குவதற்கப்பால், எமது எல்லைகளின் விரிவுபடுத்தலாகும். Emerald என்பது சம்பிரதாயபூர்வ ஆடைகள் மாத்திரமல்ல என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோம். அவை ஓர் ஆடை அலுமாரியில் காணப்பட வேண்டிய அனைத்து ஆடைகளையும் முழுமையாக வழங்கும் ஒரு வர்த்தகநாமமாகும். அலுவலகத்துக்கான போர்மல் ஆடைகள் முதல் சற்று சுதந்திரமான கெஷுவல் ஆடைகள், திரும்பிப் பார்க்க வைக்கும் மாலை நேர ஆடைகள் வரை, சேர்ட்கள், Polos, Crewnecks, Denim, Utilitech Chinos, and Cotton Chinos உள்ளிட்ட ஒவ்வொரு ஆடவருக்குமேற்ற ஆடைகள் எம்மிடம் உள்ளன" - என்றார்.

## IDB ஆதரவுடன் கொமர்ஷல் வங்கி நடத்திய மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்ட நிகழ்வுகள்





இலங்கையின் கொமர்ஷல் வங்கியின் 'திரிபல அடுத்த தலைமுறை பாடசாலை தொழில்முயற்சியாளர் சீராக்கல் திட்டத்தின்' கீழ் நடத்தப்பட்ட இரண்டு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை கம்பஹாவிலுள்ள யசோதரா தேவி பாலிகா வித்தியாலயத்தின் தொழில்முயற்சியாளர் வட்டத்தின் மாணவர்கள் குழு ஒன்று அண்மையில் நிறைவு செய்தது.

இதற்கிணங்க கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) வளவாளர்களால் நடத்தப்பட்ட 'வீட்டளாவிய மட்டத்தில் வெதுப்பக பொருட்களை உற்பத்தி செய்தல்' மற்றும் 'அழகு கலாசாரப் பயிற்சி' ஆகிய இரண்டு திறன் மேம்பாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்ட பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இரண்டு நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் கருத்துரை வழங்கிய கொமர்ஷல் வங்கியின் தனிப்பட்ட வங்கியியலின் பிரதிப் பொது முகாமையாளர் திலக்ஷன் ஹெட்டியாராச்சி, நாட்டின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கை வகிப்பதாகத் தெரிவித்தார். இளம் தொழில்முயற்சியாளர்களை ஆதரிப்பதானது புத்தாக்கங்களை வளர்ப்பதற்கும் தேசத்துக்கு வலுவான பொருளாதார அடித்தளத்தை உருவாக்குவதற்கும் முக்கியமானது என்றார்.

கொமர்ஷல் வங்கியின் திரிபல அடுத்த தலைமுறை பாடசாலை தொழில்முயற்சியாளர் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டமானது பாடசாலை தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தவும் பாடசாலை தொழில் முயற்சியாளர் வட்டங்களிடையே புதிய மாற்றத்துக்கான மனநிலையை வளர்க்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்களை காட்சிப்படுத்திய SLIIT SciFest - 2024







நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளிலிருந்து இளம் சிந்தனைகளின் புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்டாடும் வருடாந்த நிகழ்வான இரண்டாவது SciFest நிகழ்வை 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 08ஆம் திகதி வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. SLIIT இன் மனிதநேய மற்றும் விஞ்ஞான பீடத்தின் பிரயோக விஞ்ஞானத் திணைக்களத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ருஹுணு பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் ருசிர குமாரதுங்க இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

SciFest - 2024 நிகழ்வானது பாரம்பரிய வினாடி-வினா போட்டிக்கு மாற்றமாக 'இளம் கண்டுபிடிப்பாளர்கள்' போட்டி என்ற புதிய பரபரப்பான அம்சத்தை அறிமுகப்படுத்தியிருந்தது. 'நிலையான இலங்கைக்கான புதுமையான தீர்வுகள்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்தப் போட்டியில், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து பலர் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 35 வீடியோக்களில் இருந்து 24 திட்டங்கள் கடுமையான தெரிவுமுறையின் கீழ் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியிருந்தன. கொட்டாவ ஆனந்தாக் கல்லூரி தனது புத்திசாலித் தனமான கண்டுபிடிப்பான 'யானை பாதுகாப்பு வழிகாட்டல் முறைமை'க்காக முதலாவது இடத்தைத் தட்டிச் சென்றது. இரண்டாவது இடத்தை கேகாலை சென். மேரிஸ் கல்லூரி தனது 'நிவாரணகால அட்டவணை தயாரிப்பாளர்' திட்டத்துக்காகப் பெற்றுக் கொண்டது. மூன்றாவது பரிசு இரண்டு அணிகளுக்கிடையில் பகிரப்பட்டது. 'தானியங்கி ஓவியர்' திட்டத்தைத் தயாரித்த குருநாகல் லக்தாஸ் டி.மேல் கல்லூரியும் கொட்டம்பிட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரியின் 'ஸ்மார்ட் பாலம்' திட்டத்துக்கும் மூன்றாவது பரிசு வழங்கப்பட்டது.

SLIIT இன் மனிதநேய மற்றும் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி மலித விஜேசுந்தர குறிப்பிடுகையில், "விஞ்ஞானத்தில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு துடிப்பான தளமாக SciFest 2024 ஐ நடத்தியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிகழ்வு படைப்பாற்றலை வளர்ப்பதையும் அடுத்த தலைமுறை விஞ்ஞான சிந்தனையாளர்களை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" - என்றார்.

# தொடரை வென்று டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற அவுஸ்திரேலியா
# இந்தியாவின் தோல்வியால் இலங்கையின் கனவு மண்ணானது

**(அகீல் சிஹாப்)**

இந்தியாவுடனான ஐந்தாவது டெஸ்டில் 06 விக்கெட்டுகளினல் இலகு வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரை 3-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியதுடன், ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டிக்கும் உத்தியோகபூர்வமாக தகுதிபெற்றது.



பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் 04 போட்டிகள் முடிவில் ஆஸி. அணி 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்த நிலையில் தொடரின் இறுதிப் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சிட்னியில் ஆரம்பமானது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியை தழுவினால் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்துவிடும் என்ற நிலை காணப்பட்டது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸூக்காக 185 ஓட்டங்களை சேர்த்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 181 ஓட்டங்களை பெற்றது. அதன் படி 04 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணி 157 ஓட்டங்களில் சுருண்டு போனது.

இதனால் ஆஸி. அணியின் வெற்றியிலக்காக 162 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. குறித்த இலக்கை நோக்கி அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்த ஆஸி. அணி 27 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் ஆஸி. அணி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதுடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

மேலும் ஆஸி. அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு 2ஆவது அணியாக தகுதிபெற்றதால் இந்தியா மற்றும் இலங்கை அணிகளிடம் காணப்பட்ட டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி வாய்ப்பு பறிபோனது.

அதன் பிரகாரம் ஜூன் மாதம் நடைபெறும் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்க – அவுஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

தற்போது டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் இந்திய அணி 50 வெற்றி சதவீதத்துடன் மூன்றாமிடத்தில் உள்ளது. இந்திய அணியின் போட்டிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதால் இலங்கை அணி மூன்றாமிடத்தை பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. இம்மாத இறுதியில் காலியில் நடைபெறவுள்ள ஆஸி. அணியுடனான டெஸ்ட் தொடரை இலங்கை அணி கைப்பற்றினால் மூன்றாமிடத்தை பிடிக்கும் வாய்ப்பு காணப்படுகிறது.




WORLD TEST CHAMPIONSHIP TABLE

| POS | TEAM | M | W | L | D | PEN | PTS | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | SA | 11 | 7 | 3 | 1 | 0 | 88 | 66.67 |
| 2 | AUS | 17 | 11 | 4 | 2 | -10 | 130 | 63.73 |
| 3 | IND | 19 | 9 | 8 | 2 | -2 | 114 | 50.00 |
| 4 | NZ | 14 | 7 | 7 | 0 | -3 | 81 | 48.21 |
| 5 | SL | 11 | 5 | 6 | 0 | 0 | 60 | 45.45 |
| 6 | ENG | 22 | 11 | 10 | 1 | -22 | 114 | 43.18 |
| 7 | BAN | 12 | 4 | 8 | 0 | -3 | 45 | 31.25 |
| 8 | PAK | 11 | 4 | 7 | 0 | -6 | 40 | 30.30 |
| 9 | WI | 11 | 2 | 7 | 2 | 0 | 32 | 24.24 |

WORLD TEST CHAMPIONSHIP (2023-2025) | espncricinfo

# முதல் ஒருநாள் ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் மண்டியிட்ட இலங்கை



**(அகீல் சிஹாப்)**

சுற்றுலா இலங்கை அணியுடனான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 142 பந்துகள் மீதமிருக்க 09 விக்கெட்டுகளினால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைபந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கிடையில் 03 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் மற்றும் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் என்பன நடைபெறவுள்ளன.

இதில் முதல் தொடரான ரி20 தொடரினை நியூஸிலாந்து அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில் அடுத்து 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நேற்று வெலிங்டனில் ஆரம்பமாகியது. போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து முதலில் இலங்கையை துடுப்பாடப் பணித்தது.

இப்போட்டிக்கான இலங்கை அணியில் எஷான் மலிங்கவிற்கு ஒருநாள் அறிமுகம் வழங்கப்பட்டது. இலங்கை அணி நியூஸிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர்களை சந்திப்பதில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. இதனால் ஒரு கட்டத்தில் இலங்கை 24 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும் சற்று பொறுப்புடன் ஆடிய அவிஷ்க பெர்னாண்டோ – ஜனித் லியனகே ஜோடி 87 ஓட்டங்களை ஐந்தாம் விக்கெட் இணைப்பாட்டமாக சேர்த்தது. இந்த இணைப்பாட்டத்தின் நிறைவாக ஜனித் லியனகே 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஜனித்தின் பின்னர் அவிஷ்க பெர்னாண்டோவும் தனது விக்கெட்டினை அரைச்சதம் கடந்த நிலையில் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் அடுத்தடுத்து விக்கெட் பறிபோக இறுதியில் இலங்கை அணி 43.4 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 179 ஓட்டங்களை அடைய பதிலுக்கு ஆடிய நியூஸிலாந்து அணி ஆரம்பம் முதல் அதிரடியாக விளையாடி 26.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இரண்டாவது போட்டி நாளை மறுதினம் (08) ஹமில்டனில் நடைபெறுகிறது. பகலிரவு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.



உதய சூரியன் கிரிக்கெட் கழக ஏற்பாட்டில் மென்பந்து சுற்றுப்போட்டி வத்தளை உதய சூரியன் கிரிக்கெட் கழகம் ஏற்பாட்டில் வத்தளை கெரவலப்பிட்டிய மாட்டாகொட மைதானத்தில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இடம்பெற்றது. இவ்ஆரம்ப நிகழ்வை ஜனநாயக மக்கள் முன்னணி கம்பஹா மாவட்ட அமைப்பாளரும் வத்தளை மாபொல நகரசபை முன்னாள் உறுப்பினருமான சுப்ரமணியம் சசிகுமார் ஆரம்பித்து வைத்தார்.

# ஐந்து ஒலிம்பிக் தங்கம் வென்ற உலகின் வயதான ஜிம்னாஸ்டிக் வீராங்கனை உயிரிழப்பு



ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த உலகின் மிக வயதான ஒலிம்பிக் சம்பியன் ஆக்னஸ் கெலெட்டி காலமானார். 103ஆவது வயதான அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருந்த நிலையில் புடாபெஸ்டில் உள்ள வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

1921ஆம் ஆண்டு புடாபெஸ்டில் யூத குடும்பத்தில் பிறந்த இவருக்கு ஆக்னஸ் க்ளீன் என பெயர் சூட்டப்பட்டது.

பின்னர் தனது குடும்பப்பெயரை ஹங்கேரிய மொழியில் கெலேட்டி என இவர் மாற்றிக்கொண்டார். ஜிம்னாஸ்டிக்கில் ஆர்வம் கொண்ட இவர், இரண்டாம் உலகப் போரின்போது யூதப் பின்னணி காரணமாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஹிட்லரின் நாஜி அரசால் தடை விதிக்கப்பட்டது.

இருப்பினும் நாஜிகளிடம் இருந்து மறைந்திருந்தும் ரகசியமாகவும் பயிற்சியைத் தொடர்ந்தார். துரதிர்ஷ்டவசமாக, அவரது தந்தை மற்றும் பல குடும்ப உறுப்பினர்கள் ஹிட்லரின் இன அழித்தொழிப்பு வதை முகாம்களையே மிகவும் பெரியதும் கொடுமையானதுமான ஆஷ்விட்ஸ் வதை முகாமில் கொல்லப்பட்டனர்.

அழித்தொழிப்பில் இருந்து தப்பிய கெலெட்டி போருக்குப் பிறகு ஹங்கேரியின் மிகவும் வெற்றிகரமான ஜிம்னாஸ்ட் வீராங்கனையாக மாறினார். ஹெல்சின்கியில் 1952, மெல்போர்னில் 1956 ஒலிம்பிக் போட்டிகள் முதலியவற்றில் கலந்துகொண்டு 05 தங்கம் உட்பட 10 ஒலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ளார்.

இஸ்ரேலில் குடியேறிய அவர் ராபர்ட் பீரோ என்பவரை சந்தித்து திருமணம் செய்து கொண்டார். இரண்டு பிள்ளைகளை பெற்றெடுத்தார். கெலெட்டி ஒரு உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றினார். இஸ்ரேலிய தேசிய அணிக்கு பயிற்சியாளராகவும் இருந்தார். கடந்த 2015 இல் மீண்டும் ஹங்கேரிக்கு திரும்பிய அவர் எதிர்வரும் வியாழக்கிழமை (09) தனது 104ஆவது பிறந்தநாளை கொண்டாடவிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றில் முதல்முறையாக இருவருக்கு சம்பியன் பட்டம்




அமெரிக்காவில் நடைபெற்ற உலக பிளிட்ஸ் செஸ் சம்பியன்ஷிப்பில் முதல்முறையாக இருவர் சம்பியன் பட்டம் பெற்றுள்ளனர்.

போட்டியின் முக்கிய கட்டமான நொக்-அவுட் சுற்றில் வென்ற ரஷ்யாவின் இயன் நெபோம்னியச்சி, நோர்வேயின் கார்ல்சென் இருவரும் இறுதிச் சுற்றில் பங்கேற்றனர். இறுதிச் சுற்றில் இருவரும் 3.5 புள்ளிகள் பெற்றிருந்த நிலையில் சமனில் முடித்து சம்பியன்ஷிப்பை பகிர்ந்துகொள்ள ஒப்புக்கொண்டனர். வரலாற்றில் முதல்முறையாக இருவர் சிங்கிள் சம்பியன்ஷிப்பை பகிர்ந்துகொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுவரை கார்ல்சென் 07 முறை பிளிட்ஜ் செஸ் கிண்ணத்தை வென்றிருந்த நிலையில் தற்போது 8ஆவது முறையாக வென்றிருக்கிறார். ரஷ்யாவின் இயன் நெபோம்னியச்சி முதல் முறையாக பிளிட்ஸ் செஸ் கிண்ணத்தை வென்றுள்ளார்.

## எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை நான் தான் முடிவு செய்ய வேண்டும் - ரோஹித்

அவுஸ்திரேலிய அணியுடனான ஐந்தாவது டெஸ்டிலிருந்து விலகிய ரோஹித் சர்மா, தான் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவில்லை எனவும் எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை நான் தான் முடிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் கடும் விமர்சனங்களை சந்தித்த இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, ஐந்தாவது போட்டியிலிருந்து விலகினார். இதனால் இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டின் வரலாற்றில் ஒரு தொடரின் பாதியிலேயே நீக்கப்பட்ட தலைவர் என்ற மோசமான சாதனையை அவர் பதிவு செய்தார்.



இந்நிலையில், அவுஸ்திரேலியா தொடருடன் ரோஹித் ஓய்வு பெற உள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் அவர் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெறும் ஒரு போட்டியிலிருந்து மட்டுமே விலகியுள்ளேன். எப்போது ஓய்வுபெற வேண்டும் என்பதை நான் தான் முடிவு செய்ய வேண்டும். நான் எங்கும் செல்லவில்லை, இங்கு தான் இருக்கிறேன். பும்ராவின் தலைமை பாராட்டத்தக் கதாக சிறப்பாக தான் உள்ளது என்றார்.

# விளையாட்டுத் துளிகள்

இந்தியாவுடனான ஐந்தாவது டெஸ்டில் ஸ்டீவ் ஸ்மித் 02 கேட்ச் பிடித்ததன் மூலம் பார்டர்-கவாஸ்கர் தொடரில் அதிக கேட்ச் பிடித்த வீரர்களில் இரண்டாவது இடத்தை இந்தியாவின் லட்சுமண், அவுஸ்திரேலியாவின் பாண்டிங்குடன் ஸ்மித் பகிர்ந்து கொண்டனர். இவர்கள் மூவரும் தலா 36 கேட்ச் பிடித்துள்ளனர். இந்தப் பட்டியலில் இந்தியாவின் ராகுல் டிராவிட் 46 கேட்ச் பிடித்து முதலிடத்தில் உள்ளார்.

பங்களாதேஷ் அணி பந்துவீச்சாளர் தஸ்கின் அஹமட் பங்களாதேஷ் ப்ரிமியர் லீக் தொடரில் 07 விக்கெட்டுகள் வீழ்த்தி பங்களாதேஷ் ப்ரிமியர் லீக் தொடரில் ஒரே இன்னிங்ஸில் அதிக விக்கெட்டுகள் எடுத்த முஹமட் ஆமிரின் சாதனையை (17 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுகள்) முறியடித்தார். எனினும், மலேசிய வீரர் சியஸ்ருல் இடரஸ் சீனாவுக்கு எதிரான போட்டியில் 08 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 07 விக்கெட்டுகள் வீழ்த்தியதும் காலின் அக்கர்மென் 18 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 07 விக்கெட்டுகள் வீழ்த்தியதும் சர்வதேச அளவில் சாதனையாக உள்ளது.

இந்திய அணியின் ஆரம்ப வீரராக களமிறங்கிய ஜெய்ஸ்வால், ஸ்டார்க் வீசிய முதல் ஓவரிலேயே 04 பவுண்டரிகள் அடித்து அசத்தினார். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸின் முதல் ஓவரில் அதிக ரன்கள் அடித்த இந்திய வீரர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை அவர் படைத்துள்ளார். டெஸ்ட்டில் ஒட்டுமொத்தமாக 4ஆவது இடத்தை ஜெய்ஸ்வால் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய வீரர் பிஷன் சிங் பேடியின் சாதனையை பும்ரா (32) முறியடித்தார். 1977-1978ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பிஷன் சிங் பேடி 31 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்க வீரர் ரியான் ரிக்கெல்டன் இரட்டை சதம் அடித்தார். இதன்மூலம் 2016க்கு பிறகு முதல் இரட்டை சதம் அடித்த முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையையும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இரட்டை சதமடித்த வீரர் என்ற சாதனையையும் ரிக்கெல்டன் படைத்தார்.

இந்தியாவுடனான ஐந்தாவது டெஸ்டில் 162 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி அதிரடியாக விளையாடி வெறும் 6.2 ஓவர்களிலேயே அரைசதம் அடித்தது. இதன்மூலம் டெஸ் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக அதிவேகமாக அரைசதம் அடித்த 2ஆவது அணி என்ற சாதனையை அவுஸ்திரேலியா படைத்தது. முதலிடத்தில் இலங்கை (5.5 ஓவர்கள்) உள்ளது.

# மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை வரவு- செலவு திட்டத்தினூடாக உயர்த்த நடவடிக்கை

## கலைச்செல்வி எம்.பி. தெரிவிப்பு





பொகவந்தலாவ நிருபர்

''மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வரவேற்கத்தக்களவு வரவு - செலவுத் திட்டத்தில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்'' என தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (04) சனிக்கிழமை பொகவந்தலாவை பகுதியில் கட்சிக் காரியாலயத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

''மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் கட்டங்கட்டமாக வழங்கப்படும். மலையகப் பெருந்தோட்டப் பகுதியை எடுத்து நோக்கினால் கல்வி மற்றும் வீதிகள், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு கடந்த அரசாங்கத்தினூடாக தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. மலையகப் பெருந்தோட்ட மக்கள் 201 வருட காலமாக தொழிற்சங்கங்களுக்கு உள்வாங்கப்பட்டவர்கள். ஆனால், இதுவரை காலமும் எமது பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

எமது அரசாங்கம் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் வளமான எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம். தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களை அண்மையில் தொண்டமானுடைய ஆதரவாளர்கள் தாக்கிய சம்பவங்கள் பதிவாகியிருந்தன. ஆகையால், தொண்டமான், திகாம்பரம், கணபதி கனகராஜ் ஆகியோருக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உங்களின் காலம் 2023ஆம் ஆண்டோடு முடிவடைந்து விட்டது. இது எமது தலைவர் அநுரகுமார திசாநாயக்கவினுடைய அரசாங்கம். எனவே, தாங்கள் நிதானமாகச் செயற்பட்டுக் கொள்ளுங்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இவ்வளவு காலமும் மலையகப் பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வந்தது. நாங்கள் இந்த மக்களுக்கு மாற்றத்தைக் கொண்டுவர 1965ஆம் ஆண்டிலிருந்து பெரும்பாடு பட்டோம். முன்னாள் அமைச்சர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். முன்னைய காலப்பகுதியைப்போல் தற்பொழுது அட்டகாசம் பண்ணுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். இந்திய அரசாங்கம் வழங்கிய வீடமைப்புத் திட்டத்தில் கூட முன்னாள் மலையகத் தலைவர்கள் ஊழல் செய்துள்ளார்கள். அனைத்து ஊழல்களும் வெகுவிரைவில் வெளிவரும்'' என்றார்.

# கண்டி விநாயகர் கோவிலுக்கு சபாநாயகர் விஜயம்



இக்பால் அலி, டி.வசந்

பாராளுமன்ற சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன கண்டிக்கு விஜயம் செய்து மத வழிபாட்டில் ஈடுபட்டதுடன், அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்று கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதன்போது கண்டி, கட்டுகல பிள்ளையார் கோவிலுக்கு விஜயம் செய்த அவர் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டதுடன் கோவில் வரலாறு மற்றும் கண்டி இராஜ்யத்தில் இந்து சமயங்களின் பங்களிப்பு போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசியக் குழு உறுப்பினர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் சபாநாயகரின் மேற்படி விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள், கோவில் தலைவர், அறங்காவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தோட்டக் குடியிருப்புப் பிரதேசத்தை அரசு குத்தகையிலிருந்து விடுவிக்க வேண்டும்

## தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கனகராஜ் தெரிவிப்பு

அரசாங்கத்துக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களை பெருந்தோட்டக் கம்பனிகள் நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்றுள்ளன. இவை குத்தகை செலுத்துகின்ற மொத்தக் காணிகளில் தோட்டக் குடியிருப்பு பிரதேசமும் அடங்கியுள்ளது.

இதனால் பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டக் குடியிருப்பாளர்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தோட்டக் குடியிருப்புப் பிரதேசத்துக்காக பெருந்தோட்ட நிறுவனங்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தும் குத்தகையிலிருந்து அவற்றை விடுவித்து தோட்டக் குடியிருப்பாளர்களுக்கு அரசாங்கம் சுதந்திரத்தை வழங்கவேண்டுமென மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்,

பெருந்தோட்டக் குடியிருப்பாளர்களை பெருந்தோட்டக் கம்பனிகளின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குத் தேவையான பல சட்டங்களை கடந்தகால அரசாங்கங்கள் உருவாக்கி வைத்திருக்கின்றன.

இச்சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட அதிகாரங்கள் தோட்ட முகாமையாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. தோட்ட முகாமையாளரின் தகவலை அடிப்படையாகக் கொண்டு தோட்டங்களில் வசிக்கின்ற எவரை வேண்டுமானாலும் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும்படி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் உத்தரவிட முடியும். தோட்ட முகாமையாளரின் தகவலின் உண்மைத்தன்மையை அறிவதற்கு எவ்வித விசாரணையும் நடத்தப்படுவதில்லை.

இதனால் கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான தோட்டக் குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய எந்த ஒரு வழக்கும் தோட்டக் குடியிருப்பாளர்களுக்கு சாதகமாக அமையவில்லை.

தோட்டக் குடியிருப்புப் பிரதேசத்தில் வசிக்கின்ற குடும்பங்களில் சுமார் 75வீத மாணவர்கள் தோட்டங்களில் வேலை செய்யாத வேறு தொழில்துறைகளில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பெருந்தோட்ட நிறுவனங்களின் அச்சுறுத்தலை எப்பொழுது வேண்டுமானாலும் எதிர்நோக்கலாம். எனினும், இது சம்பந்தமான தெளிவை இவர்கள் அறியாமல் இருக்கின்றார்கள்.

தோட்டக் குடியிருப்பு பிரதேசம் என்பது மக்கள் வாழ்கின்ற வாழ்விடங்கள். அங்கு அவர்களின் காய்கறி பயிரிடப்படும் நிலம் மற்றும் கால்நடை வளர்ப்புக்கான புற்றரைகள் என்பன உள்ளடங்குவதோடு, பெருந்தோட்ட மக்கள் பயன்படுத்துகின்ற பொது இடங்களான மைதானம், கோவில், மயானம், சிறுவர் பாடசாலை, பாதைகள் போன்றவையும் உள்ளடக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டக் கம்பனிகள் தாம் முகாமை செய்யும் தேயிலை, இறப்பர் காணிகளை பராமரிப்பதுடன் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளும் வகையில் அரசாங்கம் சட்டதிருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இது மலையக மக்களை பெருந்தோட்டக் கம்பனிகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வழிவகுக்கும். தோட்டக் குடியிருப்புப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் இலங்கை பிரஜைகளே தவிர, பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரஜைகள் அல்லர். இந்த விடயம் சம்பந்தமாக முதலில் தோட்டங்களில் குடியிருக்கும் தோட்டக் குடியிருப்பாளர்களுக்கு தெளிவை ஏற்படுத்த வேண்டும். இதற்கான முதற்கட்ட வேலைகளை நாம் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளோம்''- எனவும் தெரிவித்துள்ளார்.

# மகள் துஷ்பிரயோகம்: தந்தை கைது 17ஆம் திகதிவரை விளக்கமறியல்

ராமு தனராஜா

ஆறு வயது நிரம்பிய தனது மகளை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் தந்தையொருவரை மடுல்சீமை பொலிஸார் கைதுசெய்து 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீமை பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் தாய் கடந்த 2023 .05.10 ஆம் திகதி வெளிநாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளதாகவும் குறித்த சிறுமி பாட்டியின் அரவணைப்பிலேயே வாழ்ந்துவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த சிறுமியிடம் மடுல்சீமை பெண் பொலிஸ் அதிகாரிகள் ஏன் பாடசாலைக்குச் செல்வதில்லை எனவும் அப்பாவின் நடவடிக்கைகள் குறித்தும் வினவியபோது, குறித்த சிறுமி தான் இரவு நேரங்களில் தந்தையிடமே படுத்துறங்குவதாகவும் அவ்வேளையில் தந்தை துஷ்பிரயோக செயல்களில் ஈடுபட்டதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் எவ்வித தொழிலுமின்றி மனைவி அனுப்பும் பணத்தில் தினமும் குடித்துவிட்டு வாழ்ந்து வருபவர். மேலும் இவர் மதுபோதைக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசியை சோதனைக்குட்படுத்தியபோது அதில் ஆபாச வீடியோக்கள், படங்கள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி மெட்டிக்காத்தன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நேற்றைய தினம் பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மின்சாரம் தாக்கி மாணவி மரணம்

ஜே.எம்.ஹாபீஸ்

ஹசலக்க பிரதேச மாணவியொருவர் மின்சாரம் தாக்கி நேற்று முன்தினம் (04) மரணித்துள்ளதாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

மெத்மி சித்தும் குமாரி என்ற ஹசலக்க பிரதேச பாடசாலையொன்றில் 9ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவியே சம்பவத்தில் மரணித்துள்ளார்.

சம்பவ தினம் இரவு மேற்படி மாணவி தனது தாயாரின் கைபேசியை வாங்கிக் கொண்டு தனது படுக்கையறைக்குச் சென்றுள்ளார். அப்போது அலறல் சத்தம் கேட்டு தாய், தந்தை மற்றும் சகோதரி மூவரும் ஓடிச்சென்று பார்த்த போது மரணித்தவர் இரும்புக்கைபிடியுள்ள கட்டிலின் ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டு அலறுவதைக் கண்டுள்ளனர்.

நிலைமையை ஊகித்த தந்தை எதிரே இருந்த மின் விளக்கை அணைத்துவிட்டு மாணவியை ஹசலக்க வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். அங்கிருந்து அவர் மஹியங்கனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு மரணித்துள்ளார். ஹசலக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வெளி நகரங்களிலிருந்து கண்டிக்கு அரசசார்பற்ற போலி சொகுசு பஸ்கள்

ஜே.எம்.ஹாபீஸ்

வெளி நகரங்கள் சிலவற்றிலிருந்து கண்டிக்கு போலி அரசசார்பற்ற சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக பொதுமக்கள் நேற்று (05) கவலை தெரிவித்திருந்தனர்.

கொழும்பு மற்றும் கட்டுநாயக்கா முதலான இடங்களிலிருந்து வரும் சில பஸ்களும் கண்டிக்கூடாக அம்பாறை, மஹியங்கனை, பதுளை போன்ற இடங்களுக்குச் செல்லும் இரவு நேர பஸ்களும் யன்னல் திரைச்சீலை மட்டும் போடப்பட்டு மற்றப்படி எந்த சொகுசு வசதிகளும் இல்லாமல் அதிக கட்டணம் அறவிடப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது விடயமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மன்னாரில் மக்களின் எதிர்ப்பையும் மீறி முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்-கனிய மணல் அகழ்வு

## தற்காலிகமாக இடைநிறுத்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

ஜோசப் நயன்





மன்னார் பகுதியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவை உடனடியாக தற்காலிகமாக நிறுத்தப்படவேண்டுமென மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட நிலையில், குறித்த அறிவிப்பை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (03) பிற்பகல் 2 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் மன்னார் ரயில் போக்குவரத்து சேவைகள், திண்மக் கழிவகற்றுதலில் உள்ள சிக்கல்கள், காற்றாலை மின்சாரத் திட்டம் மற்றும் கனியவள மண்ணகழ்வு போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இதன்போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தக் காற்றாலைத் திட்டத்தை விளக்குவதற்கு அத்திட்டத்தின் முகாமையாளர் முயன்றபோது கிராம மட்டப் பிரதிநிதிகள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர், மக்கள் விரும்பாத ஒரு செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது. எனவே, இந்தத் திட்டங்களை தற்காலிகமாக நிறுத்திவைக்க இந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தக் காற்றாலைத் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

மேலும் இந்த நடவடிக்கை தொடருமாயின் மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும். எனவே, அதை நிறுத்துவது சிறந்தது. மேலும், எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி விடயங்கள் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படுமென அவர் தெரிவித்தார். மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், துரைராசா ரவிகரன், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டதோடு, சகல திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மட்டப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், மன்னார் நகர சபையால் அகழ்வு செய்யப்படுகின்ற மனித மற்றும் திண்மக்கழிவுகள் பாப்பாமோட்டையிலுள்ள நிலையத்தில் சேகரிக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த நடவடிக்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை காரணமாக நீண்ட காலமாக மன்னார் நகர சபையினால் உரிய முறையில் கழிவகற்றும் நடவடிக்கை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டபோதிலும், தற்போது மனிதக் கழிவுகள் அகற்றப்பட்டு குறித்த நிலையத்தில் சேகரிக்க நீதிமன்றத்தினால் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

எனினும், திண்மக் கழிவுகளை அகழ்வு செய்கின்றபோதும் அதைக் கொட்டுவதற்கு உரிய இடம் இல்லையென மன்னார் நகர சபையின் செயலாளரினால் மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

# செயலிழந்துள்ள ஊர்காவற்றுறை படகு திருத்தும் நிலையம்

## நேரில் சென்று பார்வையிட்டார் கடற்றொழில் அமைச்சர்





பு.கஜிந்தன்

ஊர்காவற்றுறை பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் ஊர்காவற்றுறை இறங்குதுறையைப் பார்வையிட்டார். அத்துடன், ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள படகு திருத்தும் நிலையத்தையும் பார்வையிட்டார்.

அந்தப் படகு திருத்தும் நிலையமானது கடந்த அரசாங்கத்தினால் 2021ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட நிலையில், செயலிழந்து காணப்படுகிறது.

அதில் இதுவரை ஒரு படகு மட்டுமே ஏற்றப்பட்டு காணப்படுவதாகவும் அந்தப் படகு திருத்தும் நிலையத்தை இயங்க வைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

# ரவிகரன் எம்.பி. - வடமாகாண ஆளுநர் சந்திப்பு; வன்னியின் முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

விஜயரத்தினம் சரவணன்



வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் (04) வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. மேலும் இச்சந்திப்பில் சமூக ஆர்வலர் கிருஷ்ணபிள்ளை சிவகுருவும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் காணாமல்போனவர் முறிப்புக் குளத்தில் சடலமாக மீட்பு!

பு.கஜிந்தன்



மனநலம் பாதிக்கப்பட்ட நபரொருவர் காணாமல் போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது சைக்கிள் மற்றும் செருப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், முறிப்பு குளத்தில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில், அவரது சடலம் நேற்று முன்தினம் (04) முறிப்பு குளத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த தங்கவேல் சிவகுமார் என்பவரது சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கோணாவில் மத்தியைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட குறித்த நபர் காணாமல் போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே கிளிநொச்சி முறிப்பு குளத்தின் தடுப்பு அணையில் குறித்த நபரின் சைக்கிளும் அவரது செருப்பும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த நபரை முறிப்பு குளத்தில் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் அவரது சடலம் நேற்று முன்தினம் மீட்கப்படவில்லை. இந்நிலையில் நேற்று குறித்த குளத்தில் மிதந்த நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# நெடுந்தாரகைப் படகின் நங்கூரத்தை காணவில்லை

பு.கஜிந்தன்

நெடுந்தாரைப் படகின் நங்கூரம் நேற்று முன்தினம் (04) கடலில் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தாழமுக்க காலத்தில் படகின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவின் மற்றொரு பகுதியில் தரித்து விடுவதற்காக குறித்த படகு எடுத்துச்செல்லப்பட்டது.

இதன்போதே நங்கூரம் கடலில் காணாமல் போயுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவில் இடம்பெறும் சொற்போர் விவாத போட்டியில் இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு

மு.தமிழ்ச்செல்வன்



மலேசியாவில் உள்ள திரங்கானு பல்கலைக்கழகம் நடத்தும் அனைத்துலக வானரங்க சொற்போர் போட்டியில் இலங்கை சார்பாகப் பங்குபற்றிய அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இவ்விவாதப் போட்டிக்கு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட அணி அறிவியல் தமிழ் அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இவ்வணி முதல் மூன்று சுற்றுகளிலும் இந்தியா, சிங்கப்பூர், மலேசிய அணிகளுடன் போட்டியிட்டு தற்போது இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. இறுதிச் சுற்று இந்தியாவுடன் இடம்பெறவுள்ளது.

இலங்கை அணி சார்பில் மோகனராஜ் ஹரிகரன், கிளிநொச்சியைச் சேர்ந்த நகுலகுமார் அபிராமி, கலைச்செல்வன் யூலியட், சிவகுமார் திசான் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# சீனாவை மிரட்டும் எச்.எம்.பி.வி. தொற்று!



## ஆசியா முழுவதும் தீவிர கண்காணிப்பு

சீனாவில், எச்.எம்.பி.வி. (HMPV), என்ற புதுவகையான வைரஸ் தொற்று பரவி வருவதால் அங்குள்ள வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிரம்பி வழிகிறது. இவ்வைரஸ் தொற்று பிற நாடுகளுக்கும் பரவக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதால், ஆசியா முழுவதும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சீனாவின் ஹுஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதி பகுதியில் கொவிட் - 19 எனப்படும் கொரோனா தொற்று பரவத்தொடங்கி நிலையில் 2 - 3 ஆண்டுகளுக்கு உலகையே ஸ்தம்பிக்க செய்தது. அந்த பாதிப்பினால் வீழ்ந்த சர்வதேச பொருளாதாரம், இப்போது தான் மெல்ல சுதாரித்து எழத் தொடங்கியுள்ள நிலையில், சீனா, அடுத்த வெடிகுண்டை வீசியுள்ளது.

சீனாவின் பல்வேறு மாகாணங்களில், எச்.எம்.பி.வி. எனப்படும், ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ் (Human Metapneumovirus) என்ற தொற்று வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. இந்த தகவலை, சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் உறுதி செய்துள்ளது. இதில் பாதிக்கப்பட்டவர்களால், வைத்தியசாலைகளில் கூட்டம் அலைமோதுகிறது. குறிப்பாக, சீனாவின் வடக்கு பகுதியில் இந்த தொற்று பரவல் மிக தீவிரமாகவுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

எச்.எம்.பி.வி., தொற்று, நுரையீரலை தாக்கி கடுமையான சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடியது. அனைத்து வயதினரையும் இது தாக்கக்கூடும் என்றாலும், குழந்தைகள் எளிதில் பாதிக்கப்படுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். இந்த தொற்று பரவல் குறித்து சீன அரசோ, உலக சுகாதார நிறுவனமோ இதுவரை அவசர நிலையை அறிவிக்கவில்லை. இந்த புதிய தொற்றுப் பரவலை பல்வேறு ஆசிய நாடுகளும் தீவிரமாக கண்காணித்து வருகின்றன. குறிப்பாக, சீனாவுக்கு அருகிலுள்ள நாடுகள் அதிகபட்ச பாதுகாப்பு



நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

ஜப்பானில், கடந்த சில வாரங்களில், இன்ப்ளூவென்ஸா தொற்று பாதிப்பு தீவிரமடைந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும், ஜப்பான் முழுவதுமுள்ள 5,000 வைத்தியசாலைகளில் 94,259 பேர் ப்ளூ தொற்று பாதிப்புக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். இது வழக்கத்துக்கு மாறானது என, அந்நாட்டு சுகாதாரத்துறை கவலை தெரிவித்துள்ளது.

### எச்.எம்.பி.வி. என்றால் என்ன?

ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ் என்றழைக்கப்படும் இந்த தொற்று, நுரையீரலின் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக குழந்தைகள், முதியோர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவுள்ளோர் எளிதாக பாதிக்கப்படுகின்றனர். இந்த தொற்று முதன்முறையாக கடந்த 2001இல் கண்டறியப்பட்டது. எனினும் இதுவரை தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

### அறிகுறிகள் என்ன?

ப்ளூ (Flu) காய்ச்சல் மற்றும் இதர சுவாச தொற்றுகளின்போது ஏற்படும் அறிகுறிகளே தென்படும். இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு, மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவை பொதுவான அறிகுறிகள். தீவிர பாதிப்பு உள்ளோருக்கு மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியா பாதிப்பு ஏற்படக்கூடும். பாதிக்கப்படுவோர், மூன்று முதல் ஆறு நாட்கள் வரை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### எப்படி பரவும்?

எல்லா தொற்றுகளை போலவும் இருமல், தும்மலிலிருந்து வெளியேறும் நீர் துகள்களிலிருந்து மற்றவர்களுக்கு பரவுகிறது. தொற்று பாதித்தவர்களின் உடைமைகள் அல்லது கைகளை தொட்டுவிட்டு, மூக்கு, வாய் பகுதியை தொடும் போது பரவுகிறது.

### தடுப்பு முறைகள்

கொரோனா தொற்றுக்கு பின்பற்றிய அதே வழிமுறைகள் தான். கைகளை அவ்வப்போது சவர்க்காரமிட்டு கழுவுதல், தனிப்பட்ட சுகாதாரம், முகக்கவசம் அணிவது போன்றவை இதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

---

## 217 டிசைனர் கைப்பைகள்; 75 ஆடம்பர கைக்கடிகாரங்கள்

## சொத்துப்பட்டியலை வெளியிட்ட தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா




தாய்லாந்து பிரதமர் பேடோங்டர்ன் ஷினவத்ராவுக்கு (Paetongtarn Shinawatra) 13.8 பில்லியன் பாட் (அமெரிக்க டொலரில் 400 மில்லியன்) சொத்துகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் தேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தில் (என்ஏசிசி) அந்நாட்டு பிரதமர் தனது சொத்துப்பட்டியலை தாக்கல் செய்துள்ளார். இதனை அவரது பியூ தாய் கட்சி உறுதி செய்துள்ளது. அந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாய்லாந்து பிரதமர் ஷினவத்ராவுக்கு 13.8 பில்லியன் பாட் மதிப்பிலான சொத்துகள் உள்ளன. அதில், 11 பில்லியன் பாட் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பில்லியன் பாட்டை அவர் ரொக்கம் மற்றும் டெபாசிட்டாக வைத்துள்ளார்.

மேலும், 75 ஆடம்பர கைக்கடிகாரங்களின் மதிப்பு 162 மில்லியன் பாட். 217 டிசைனர் ஹேண்ட்பேக்குகளின் மதிப்பு 76 மில்லியன் பாட். இவைதவிர, லண்டன் மற்றும் ஜப்பானில் அவருக்கு சொத்துகள் உள்ளன.

ஷினவத்ராவுக்கு 05 பில்லியன் பாட் கடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, அவரது நிகர சொத்து மதிப்பு 8.9 பில்லியன் பாட் ஆகும். அமெரிக்க மதிப்பில் 258 மில்லியன் டொலராகும். இவ்வாறு அந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் தற்போதைய பிரதமர் பேடோங்டர்ன், முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவத்ராவின் மகள் ஆவார். இவர், கடந்த செப்டெம்பரில் தாய்லாந்து பிரதமராக பொறுப்பேற்றார். தாய்லாந்தை இவரது குடும்பம் தான் கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறது. அந்த வகையில், தாய்லாந்தை ஆளும் அந்த குடும்பத்தின் நான்காவது வாரிசுதான் பேடோங்டர்ன்.

## சிரியாவில் ஈரானின் ஏவுகணை தொழிற்சாலை: மூன்று மணிநேரத்துள் அழித்தொழித்த இஸ்ரேல்



சிரியாவில் நிலத்தடியில் ஈரான் அமைத்திருந்த ஏவுகணை தயாரிப்பு ஆலையை 03 மணி நேரத்துக்குள் அழித்து தரைமட்டமாக்கிய இஸ்ரேல் இராணுவம் அது தொடர்பான வீடியோவை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 120 பேர் கொண்ட எலைட் விமானப் படைப்பிரிவு கமாண்டோக்கள் இந்த ஒபரேஷனில் ஈடுபட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேலில் இருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருந்த இந்த ஆலையிலிருந்து ஹிஸ்புல்லாஹ் அமைப்பினருக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்யப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

நிலத்துக்குக் கீழ் 230இலிருந்து 430 அடி ஆழத்தில் இந்த ஆயுதத் தொழிற்சாலை அமைந்திருந்ததால் வானிலிருந்து தாக்கி அழிப்பது இயலாத காரியமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காஸாமீது இஸ்ரேல் தாக்குதல் மூன்று நாட்களில் 200 பேர் பலி



காஸாமீது கடந்த மூன்று நாட்களாக இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில், 200இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பேராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் ஓராண்டை கடந்தும் நீடித்து வருகிறது. இந்நிலையில் காஸாமீதான தாக்குதல்களில் இதுவரை 45,805இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1,09,064இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

### அமைதி திரும்புமா?

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் மோதலுக்கு மத்தியில் கட்டாரில் போர் நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய படைகள் முழுமையாக வெளியேறுவது, பலஸ்தீனர்கள் தங்களது பழைய இருப்பிடங்களுக்கு திரும்பும் வகையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நேற்று (05) 24 மணி நேரத்தில் 88 பேர் உயிரிழந்ததாகவும் 208 பேர் காயமடைந்ததாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலால், நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல், குடியிருப்பு கட்டடம் உருக்குலைந்துள்ளதாக தெரிவித்துள்ள மக்கள்,






இடுபாடுகளில் குழந்தைகள் உள்ளிட்டோர் சிக்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குளிர் நிலவி வருவதால் சுமார் ஒன்பதரை இலட்சம் மக்களுக்கு கம்பளி, தார்பாலின் போன்றவை தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

## விபத்தில் சிக்கிய துருவ்: மூவர் உயிரிழப்பு



குஜராத் மாநிலம் போர்பந்தரில் பயிற்சியின் போது, இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான துருவ் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் மூவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளனர். இச் சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்பு படையினர், மீட்பு பணி மேற்கொண்டனர்.

விபத்துக்கான காரணம் குறித்து, கடற்படை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். தொழில்நுட்பம் காரணம் தான் விபத்து ஏற்பட காரணமென முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

## ரோஹிங்கியாக்களுக்கு அனுமதி மறுத்த மலேசியா



மலேசியாவில் அடைக்கலம் தேடி இரு படகுகளில் சென்ற சுமார் 300 ரோஹிங்கியா அகதிகளை அந் நாட்டு அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

அந்தப் படகுகளில் பற்றாக்குறையாக இருந்துவந்த உணவு மற்றும் குடிநீரை வழங்கிய மலேசிய கடல்பாதுகாப்புப் படையினர், தங்கள் கடல் எல்லைக்கு அப்பால் அவற்றை அனுப்பிவைத்தனர்.

## ஆபாசப்பட நடிகைக்கு பணம் கொடுத்த விவகாரம்:

# ட்ரம்புக்கு எதிரான வழக்கு: 10இல் வெளியாகிறது தீர்ப்பு

### அமெரிக்க அரசியலில் பெரும் பரபரப்பு



அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் 20ஆம் திகதி, அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில் ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில், கடந்த 2016ஆம் ஆண்டு தேர்தல் நிதியை முறைகேடாக கையாண்ட வழக்கில் அவர் குற்றவாளியென 12 ஜூரிகள் அடங்கிய குழு அறிவித்தது. அதாவது தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஆபாசப்பட நடிகை ஸ்டோமி டேனியல்ஸுக்கு சுமார் 1.3 இலட்சம் டொலர்களை 2016ஆம் ஆண்டுக்கான தேர்தல் பிரசார நிதியிலிருந்து கொடுத்ததாக சொல்லப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் நியூயோர்க் நீதிமன்ற நீதிபதி ஜுவான் மெர்ச்சென் பிறப்பித்த உத்தரவில், 'ட்ரம்புக்கு எதிரான வழக்கில் எதிர்வரும் 10ஆம் திகதி தீர்ப்பு மற்றும் தண்டனை விபரங்கள் வெளியிடப்படும்' என்று அறிவித்துள்ளார்.

நீதிபதியின் இந்த உத்தரவு, அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவிருக்கும் ட்ரம்புக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அவரது கட்சியான குடியரசு கட்சியும் அதிர்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், ட்ரம்ப் சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. அவர் பிணையில் விடுவிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவர் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டதால், தண்டனை பெற்ற ஒருவர் ஜனாதிபதியாக பதவியேற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7